விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 04 புதன்கிழமை (18.05.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 150


ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இராணுவத்தின் அறிக்கை இவ்வாரம் கையளிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக் குப்பதில் அளிக்கும் வகையில் படைத்தரப்பால் தயாரிக்கப் படும் அறிக்கை இவ்வாரம் பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்படவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது படைத்தரப்பால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபி மான நடவடிக்கைகளின் உண்மையான தகவல்கள் உள் ளடக்கப்பட்டிருக்கும் என படைத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜயகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)



வெசாக் பண்டிகையை முன்னிட்டு யாழ். நூலகம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வெசாக் கூடுகளில் ஒன்றையும் அதனை பார்வையிடச் சென்ற மக்கள் கூட்டத்தினையும் படங்களில் காணலாம்.

# போர்க்குற்ற விசாரணைகளுக்கு இலங்கையிடம் இந்தியா வலியுறுத்தல்

(புதுடில்லி)

**ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் விரைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது.**

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் புதுடில்லிக்கு மேற்கொண்ட உத் தியோக பூர்வ விஜயத்தின் போது நேற்று இந் தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் நேற்று முன்தினம் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி, வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் வெளிவிவகார செயலாளர் நிரூபமா ராவ் ஆகியோருடன் பேச்சுவார்த் தைகளை (20ஆம் பக்கம் பார்க்க)

## எரிக் சொல்ஹெய்மின் கூற்றுக்கு அரசாங்கம் கடும் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கையின் அசாதாரண நிலைமை களை கருத்தில் கொண்டு ஒரு சிலருக்கு அகதி அந்தஸ்து வழங்க நடவடிக்கை எடுத்த தாக சொல்ஹெய்ம் கூறியிருப்பது தொடர் பில் அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளி யிட்டுள்ளது.

இலங்கையிலுள்ள நோர்வே தூதரகத் தின் ஒரு சில அதிகாரிகள் விடுதலைப்புலி களின் முக்கிய உறுப்பினர்கள் 12 பேர் நாட் டைவிட்டு தப்பிச் செல்வதற்கான கடவுச்சீட்டு, விமானப்பயணச்சீட்டு என்பவற்றை வழங்கி தூதரக வாகனத்திலேயே அவர்களைக் விமான நிலையம் வரை அழைத்துச் சென்று வழியனுப்பியதாக நோர்வேயின் முன்னணி நாளேடு செய்திவெளியிட்டிருந்தது.

அத்துடன் இலங்கையின் ஒரு சில நிலை மைகளைக் (19ஆம் பக்கம் பார்க்க)

## இழந்து போன அரசியல் உரிமையை வென்றெடுக்க சபதம் ஏற்போம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய துக்கநாளாகிய இன்று முள்ளி வாய்க்கால் வரலாற்றுப் பெருந்துயரை நெஞ் சில் இருத்தி, இலங்கைத் தீவில் தமிழர்கள் இழந்துபோன தமது அரசியல் தன்னாட்சி உரிமையை வென்றெடுக்க சபதம் ஏற்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித் துள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது,

ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் மீது முள்ளி வாய்க்கால் காலத்தால் ஆற்றமுடியாத பெருந் துயரமாகப் பதிந்துவிட்டிருக்கிறது.

இங்குதான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற முற்றுகைப் போரில் எமது மக்கள் பால்-வயது வேறுபாட்டின்றி, வகை-தொகையின்றி ஈவிரக்கமற்ற முறை யில் கொல்லப்பட்டார்கள். அங்கவீனமாக் கப்பட்டார்கள். உணவும் மருந்தும் இன்றிப் பரிதவிக்க விடப்பட்டார்கள். அவலங்களைக் கண்ணுற்று சித்தசுவாதீனமாக்கப்பட்டார்கள். எஞ்சியோர் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.சிறையிலிருந்து 9 கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

2600 ஆவது சம்புத்தத்வ ஜயந்தியை முன்னிட்டு யாழ்ப்பாண சிறைச்சாலையி லிருந்து 9 கைதிகள் நேற்று விடுதலை செய் யப்பட்டனர்.

நீதி மன்றத்தால் விதிக்கப்பட்ட அபராதத் தை செலுத்த தவறிய குற்றத்தின் பேரில் சிறைவைக்கப்பட்டவர்களே இவ்வாறு விடு தலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் கஞ்சா, கசிப்பு என்பவற்றைத் தமது உடைமையாக வைத்திருந்த (20ஆம் பக்கம் பார்க்க)



யாழ். சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்ட கைதிகள்.

## வெள்ளைக்கொடி விவகார வழக்கை மீளப்பெற அரசு ஆலோசனை

(கொழும்பு)

சிறைவைக்கப்பட்டுள்ள முன்னாள் இரா ணுவத்தளபதி பொன்சேகாவுக்கு எதிராக சட் டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வெள் ளைக் கொடி விவகார வழக்கை மீளப்பெறு வது குறித்து அரசாங்கத் தரப்பு ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவரை அலரி மாளிகைக்கு அழைத்து இவ் விவகாரம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கும் எதிர்க்கட்சி அரசியல்வாதிக்கும் இடை யில் இடம்பெற்ற சந்திப்பில் ஆலோசிக் கப்பட்ட விடயங்கள் குறித்த தகவல்களை அவ் வட்டா ரங்கள் வெளியிடவில்லை.

இந்ததக (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீஸா பெறுவதற்கான Sponsorship
பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)

# இரண்டு வருடங்கள் கடந்த போதிலும் மக்களின் வாழ்வில் முன்னேற்றம் இல்லை

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

உலக வரலாற்றில் தாட்சணியத்திற்கும், நீதியைப் பெறுதற்கும், சட்டமுறையான பாதுகாப்பைப் பெறுவதற்கும், கைவிலங்குகளின்றிச் சுதந்திரத்துடன் நடமாடுவதற்கும் பாக்கியம் கிட்டாமை எமக்கொரு துரதிர்ஷ்டமே என யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அவர்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கை வருமாறு,

முள்ளிவாய்க்காலில் வரையப்பட்ட வடுக்களுடனும், ஆறாத மனக்காயங்களுடனும், உள்ளெழும் அழுகுரலையும் தாங்கிக்கொண்டு, உள்ளூரத் தெரியும் ஏதோவொரு நம்பிக்கையை மனதில் எண்ணியவாறு, ஆயுதமோதலின் போது எங்களை விட்டுப் பிரிந்த எமது சக பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், எங்கள் உடன் சகோதரர்கள் ஒவ்வொருவரையும் மனதில் எண்ணி அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஆயுதமோதலும், அதனோடு இணைந்த எண்ணற்ற மரணங்களும் நடந்துமுடிந்து இரண்டு வருடங்கள் நிறைவடைகின்றன. இருப்பினும் நினைத்துப் பார்க்க முடியாத அந்த இறுதி நாட்களும் நேரங்களும் இப்பொழுதும் மனதில் ஊசலாடுகின்றன. எப்பொழுதும் ஊசலாடும்.

வன்னி அவலங்கள் நிறைவடைந்து இரண்டு வருடங்கள் நிறைவுபெற்றாலும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை இன்னமும் முன்னேற்றமின்றியும், மீள்நிர்மாணம் செய்யப்படாமையும் உள்ளமை வருத்தத்தை அளிக்கின்றது.

கல்வியினை அபிவிருத்தி செய்வதே தமிழினத்தின் உறுதியான ஏமாற்றப்பட முடியாத எதிர்காலத்திற்கு உத்தரவாதம் என்பதால் தமிழினத்தின் கல்வி அபிவிருத்தி குறித்து அனைத்து சமூகத்தினருடனும் அக்கறையுடன் செயற்பட வேண்டுமென்றும், இதற்காக அனைவரும் ஒன்றிணைந்த ஒரு செயற்திட்டத்தினை தயாரிப்பதில் கவனஞ் செலுத்த வேண்டுமென்றும் அழைப்பு விடுக்கின்றோம்.

தமிழர் பிரதேசங்களில் யுத்தத்தின் வடுக்களாக எஞ்சியுள்ள தாய், தந்தையாரை இழந்தோர். விழிப்புலனற்றோர், அங்க அவயவங்களை இழந்தோர், கணவனையோ மனைவியையோ இழந்த குடும்பஸ்தர்கள், பிள்ளைகளை இழந்து தனித்து வாடும் பெற்றோர்கள், முதியோர்கள், உடல் செயல் திறனற்றுப்போய் இருக்கும் சகோதரர்கள் தொடர்பாகவும், அத்துடன் யுத்தத்தினால் இழந்து போயிருக்கும் கல்வி, வேலை வாய்ப்புக்கள், கடின உழைப்பினால் சம்பாதித்துக் கொண்ட சொத்துக்கள், வாழ்வாதார மூலதனங்கள், இயற்கை வளங்கள் என்பவற்றின் எதிர்காலம் குறித்த மிகப் பெரிய கேள்வியும், சவாலும் எங்கள் முன்னால் விடப்பட்டிருக்கின்றதை ஞாபகப்படுத்துகின்றோம்.

இவற்றின் மீது கவனஞ் செலுத்தி, தேவையான ஆய்வினை மேற்கொண்டு, பொருத்தமான செயல் திட்டங்களைத் தயாரித்து, மீளவும் நம்பிக்கையையும், நல்வாழ்வையும் உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென்று அழைத்து நிற்கின்றோம். இதற்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் சார்பில் எங்களின் காத்திரமான பங்கு எப்பொழுதும் இருக்கும் என்பதையும் உறுதி பூணுகின்றோம்.

அரசியல் நிலைப்பாடு தொடர்பில் நாம் எப்பொழுதும் வரலாற்றின்பால் கட்டுப்பட்டவர்களாகவே நடந்து கொள்ளவிரும்புகின்றோம். தற்போதைய சூழலில் தமிழினத்தின் அரசியற்தீர்வு மற்றும் உரிமைகள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டு வரும் சூழல் காணப்படுகின்றது. எது எவ்வாறிருப்பினும், அரசியல் தீர்வு விடயங்களில் கவனஞ்செலுத்துகின்ற அரசுடன் பேச்சு நடத்துகின்ற தலைவர்கள் மக்களால் தமக்கு வழங்கப்பட்ட ஆணையின்படி தாங்கள் நடப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

அத்துடன், எந்தவொரு அரசியல் தீர்வு தொடர்பாகவும் இறுதித்தீர்வு எட்டப்படுவதற்கு முன்னர் தமிழினத்தின் அனைத்துத் தரப்பினருடனும் திறந்த நிலையிலான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். அரசியற் தீர்வு என்பது இரகசியமானதொன்றாக மேற்கொள்ளப்படுவது ஆகாது என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம்.

சமூகத்தின் மீதான அக்கறை, எதிர்காலம் குறித்தான சிந்தனையில் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினராகிய நாமும் எப்பொழுதும், தெளிவாகவும், பொறுப்புடனும் செயற்படும் என்பதை இந்நாளில் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களுக்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பாடலையும், ஆக்கபூர்வமான உறவினையும் சேதப்படுத்துவதில் பல்கலைக்கழகத்திற்குள்ளும், வெளியிலும் திட்டமிட்டுச் சில சக்திகள் செயற்படுகின்றபோதும், இவைகளைக் குறித்து எச்சரிக்கையுடனும் அவதானத்துடன் செயற்பட்டு, சரியான பாதையில் பயணிப்பதை நாம் உறுதி செய்கின்றோம்.

இறுதியாக நாம் ஒன்றுபட்டுச் சிந்திப்பதும், செயலாற்றுவதுமே எமக்குப் பலமும், இன்றியமையாத அவசியமாகவும் உள்ளன. எனவே, தமிழினத்தின் அனைத்துச் சமூகங்களையும் ஒன்றிணைத்தவகையில் சமூக விருத்திக்கானதும், அரசியல் உரிமைக்கானதுமான ஒன்றிணைந்த செயற்பாட்டை முன்னெடுக்க அனைவரும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், அத்தகைய முயற்சிகளுக்குப் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் ஆதரவு எப்பொழுதும் இருக்கும் என்றும் உறுதியெடுத்துக் கொள்கின்றோம்.

(எ)

# சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா 2011

இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்.
காலம்:- 20.05.2011 வெள்ளிக்கிழமை
நேரம்:- முற்பகல் 10.00 மணி

வாழ்த்துரை:- "ஞானபண்டித சேவா சுரபி"
வைத்திய கலாநிதி
சி. கதிரைவேற்பிள்ளை

சிறப்பு நிகழ்வு:- வயலின் இசை,

வாராந்த நிகழ்வு:-சொற்பொழிவு- தேவிபாகவதம்(தொடர்)
வழங்குபவர்:- அ. குமாரவேல்
(சிரேஷ்ட விரிவுரையாளர்)

குறிப்பு:- ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சமுதாயப் பணிகளின் வகையில் மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.

வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து மேற்படி நிகழ்வுகள் யாவும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

பேரவையினர்,
சந்நிதியான் ஆச்சிரமம்.

(சி-3243)

# 8 ஆம் மாத நினைவஞ்சலி



தோற்றம்
18
08
1956

மறைவு
17
09
2010

## அமரர் சந்திரசேகரம் பவானிதேவி

மௌனங்கள் நிலையாகிப் போய்விட
சோகமே எம் வாழ்வில் சூழ்ந்தது
உண்மை அன்பின் உருவமொன்று
எம்மை விட்டு சென்ற கணங்கள்
நிதம்நிதம் நெஞ்சை வாட்டுதே!
அடுத்த பிறவியிலேனும்-அம்மா
எம்மோடு ஆயுசுமுழுதும் வாழ்வீரோ!

கம்பஸ் லேன்,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(சி-3242)

# திருமண வாழ்த்துக்கள்



18.05.2011 இன்று தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் இறைவன் திருவருளால் திருமண பந்தத்தில் இணையும் மணமக்களான

கிரிதரன்
கமலாதேவி

தம்பதிகள் துர்க்கையம்மன் திருவருளால் பல வளமும் பெற்று நீடூழி காலம் வாழ்க வாழ்க என மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்,
திரு. திருமதி தங்கவடிவேல் குடும்பம் (கோண்டாவில்)
திரு. திருமதி பரமநாதன் குடும்பம் (ஆலடி, காரைநகர்)
திரு. இராசலிங்கம் குடும்பம் (திருநெல்வேலி)

(சி-3244)

# இன்று ஒரு தகவல்

## பூமியில் சொர்க்கம்

ஒருநாள் பெரியவர் ஒருவர் வந்தார். அவர் தியானம் செய்யும் வழக்கம் உள்ளவர். ஒரு பெரிய சந்நியாசியுடன் தொடர்பு கொண்டவர். அவரிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

அவரிடம் நான், "என்ன சேர்.. உலகம் முழுவதும் எங்கே பார்த்தாலும் சண்டை, சச்சரவாகவே இருக்கிறது. எதிர்காலத்தில் மனிதன் நிம்மதியாகவே வாழ முடியாது போல் உள்ளதே!'' என்று கூறினேன்.

"அதற்கு யார் காரணம் என நினைக்கிறீர்கள்?'' என்று என்னைக் கேட்க நான் ''தெரியவில்லையே!'' என்றேன். அவர், மனிதன்தான் காரணம் என்றார்.

மேலும் அவர் ''மனிதன் மனம் வைத்தால் இந்தப் பூமியையே சொர்க்கமாக மாற்ற முடியும் சேர்! இது ஏதோ பேச்சுக்காகச் சொல்லும் வார்த்தை இல்லை. நிஜம்!'' என்றார்.

ஆர்வமாக அவர் சொல்வதை காது கொடுத்து கேட்க ஆரம்பித்தேன்.

அவர் சில விஞ்ஞான உண்மைகளை கூறினார்:

ஒரு சோதனை நடந்ததாம். ஒரே மாதிரியான இரண்டு தோட்டங்கள். அவற்றில் ஒரு தோட்டத்தில் அந்த தோட்டக்காரர் அங்கேயிருந்த செடி, கொடிகளை அன்பாகவும் கனிவாகவும் கவனித்து கொண்டாராம். அதே தோட்டக்காரர் இன்னொரு தோட்டத்திலுள்ள செடி கொடிகளை மிகவும் வெறுப்பாகவும் எரிச்சலாகவும் கவனித்துக் கொண்டாராம். அன்பாகவும் கனிவாகவும் கவனித்துவந்த செடி கொடிகள் சீக்கிரமாகவும் வலுவாகவும் வளர்கிறதாம். வெறுப்பாக கவனித்து வந்த தோட்டம் அந்த அளவுக்கு வளரவில்லையாம். ஆச்சரியமாகத் தான் இருந்தது.

இன்னொரு சோதனை:

ஒரு தோட்டத்தில் இருந்த ஒரு தோட்டக்காரருக்கு Prune செய்வது மட்டும்தான் வேலை. அதாவது ஒரு பெரிய கத்தரிக்கோலை இரண்டு கைகளாலும் பிடித்துக் கொண்டு தேவையில்லாத கிளைகளை வெட்டி ஒழுங்குபடுத்தும் வேலை. இந்தத் தோட்டக்காரர் ஒருநாள் தனது நண்பரை பார்ப்பதற்காக மற்றொரு தோட்டத்துக்குச் சென்றார்.

அவர் அங்கே சென்றவுடன் அங்கே இருந்த சில நுட்பமான செடிகள் 'இவர் தங்களை வெட்டுவதற்காகத் வருகிறார் என்பது போல் இலைகளைச் சுருக்கிக் கொள்ள ஆரம்பித்ததாம்.

இதிலிருந்து மனிதனுடைய எண்ண அலைகள் இன்னொரு பொருளையும் பாதிக்கும், பாதிக்கிறது என்ற ஓர் உண்மை தெரிய வருகிறது. ஒரு தனி மனிதன் எண்ணம் சொல்–செயல் இந்த பிரபஞ்சத்தில் ஒரு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பது திட்டவட்டமான ஓர் உண்மை.

எல்லோருக்கும் நல்ல எண்ணங்களையே நினைத்தால் உலகில் நன்மைகள் பெருகும் . தீமைகள் குறையும். சரி! நல்ல எண்ணம்(Right Thought) என்பது என்ன?

இயற்கையின் விதிகளைப் புரிந்து கொண்டு அதை மீறாமல் அதனுடன் ஒத்துப் போகும் எண்ணம் தான் நல்ல எண்ணம். நமது வாழ்க்கை ஒரு சங்கிலி தொடர் போன்று உணர்வுபூர்வமாக (Life - Energy Vibration) இணைக்கப்பட்டிருக்கிறது.

ஒருவரின் உடலுக்கோ – மனதுக்கோ ஏதோ ஒரு அதிர்ச்சியில் பாதிப்பு ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அது அவருக்கு இரத்த சம்பந்தமுள்ள (Boold Related) அல்லது கடமை சம்பந்தமுள்ள (Duty Related) மற்றவர்களின் உடம்பிலும் மனதிலும் ஓரளவு பாதிப்பை ஏற்படுத்தும்.

இயற்கையின் இந்த விதிமுறையின் படி தான் எண்ண அலை கள் அடுத்தவரைப் பாதிக்கிறது.

The atmosphere can bear negative thoughts only to a certain extent and finally. bursts into crisis riots and wares!

வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பது வெறும் திண்ணைப் பேச்சு இல்லை. அது ஒரு விஞ்ஞானப் பூர்வமான திட்டவட்டமான உண்மை.

இப்படி இவ்வளவு விடயத்தையும் என்னைப் பார்க்க வந்த அந்த பெரியவர் விவரமாக எடுத்துக் கூறினார். அவர் இன்னொன்றும் சொன்னார்.

''இந்த விஞ்ஞானம் உண்மைகளை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் குறைந்தது மூன்றாவது வகுப்பிலிருந்தா வது குழந்தைகளுக்குப் போதித்தால் எதிர்காலத்தில் நல்ல விதமான எண்ண அலைகள் இந்தப் பிரபஞ்சத்தில் பரவும். அதன் பிறகு இந்தபூமியே சொர்க்கமயமாகும் என்றார்.

இது சிந்திக்க வேண்டிய ஒரு விடயம் தான்.

உலக சமாதானத்திற்காக அணு ஆயுதங்களைக் குறைக்க வேண்டும் என்று ஒரு பக்கம் முடிவு செய்தாலும் குழந்தைகளை நல்ல விதமாக நாம் வளர்க்க வேண்டும் என்பதும் ஒரு முக்கியமான விடயம். அதை யாராலும் மறுக்க முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த (உ/த) பரீட்சை மீளாய்வு பெறுபேறுகள் நாளை வெளியீடு

(கொழும்பு)

கடந்த 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் மீளாய்வு பெறுபேறுகள் நாளை வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

குறித்த மீளாய்வு பெறுபேறுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பரீட்சைகள் திணைக்களம் கையளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவை நாளை வியாழக்கிழமை பரீட்சாத்திகளுக்கு அறிவிக்கப்படும் எனவும் வெட்டுப் புள்ளி மற்றும் நாடளாவிய மாணவர்களின் நிலைகளில் மாற்றம் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ–2)

# கொழும்பில் மீண்டும் பிலிப்பைன்ஸ் தூதரகம்

(கொழும்பு)

கொழும்பில் பிலிப்பைன்ஸ் தூதுவர் காரியாலயத்தை மீண்டும் திறந்ததன் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான புதிய உறவுநிலை மேம்பட்டுள்ளதாக பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

வெசாக் பண்டிகை சுற்றுலாவை மேற்கொண்ட மணிலாவிற்கு சென்ற அவர் அந்த நாட்டு அரச தலைவர்களை சந்தித்துள்ளார்.அதேவேளை இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அக்கினோவுக்கு இலங்கை பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர உறவு கடந்த 1951 ஆம் ஆண்டு தொடக்கம் நிலை பெற்று வந்தது.

எனினும் 1990 ஆம் ஆண்டு மணிலாவில் உள்ள இலங்கைக்கான தூதரகம் மூடப்பட்டது. கொழும்பில் உள்ள பிலிப்பைன்ஸ் தூதுவர் காரியாலயம் 1993 ஆம் ஆண்டு மூடப்பட்ட அதேவேளை 1998 ஆம் ஆண்டு மணிலாவில் மீண்டும் இலங்கை தூதரகம் திறக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது (ஸ்ரீ–2)

# கர்நாடக இசைப்பெருவிழா–2011

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக்கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கர்நாடக இசைப்பெருவிழா - 2011 எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். மாநகரசபையின் திறந்தவெளி அரங்கில் நடாத்தவுள்ளது.

மேலும் பண்பாட்டுச் செழுமையும் கலைவளமும் இசை ஞானமும் மேலாண்மை செலுத்துகின்ற இலங்கையின் வடமாகாணத்து இசைப்பெருவிழாவாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களின் பிரசித்தமான மரபுவழி இசைக்கலைஞர்களின் திறமையும் மேதாவிலாசமும் இதன் மூலம் வெளிப்படுவதுடன் இசைக் கலைஞர்கள் இசையில் ஊட்டம் பெறவும் மேலும் தமது நிபுணத்துவ பலத்தைப் பெறவும் இது உதவும். நம் கலைஞர்களினது இசை ஞானம் சேனுயர் தேசம் எங்கும் சென்று சேர வேண்டும் என்பதே இவ் விழாவினது நோக்கமாக அமைகின்றது. அத்துடன் மூத்த மற்றும் இளம் கலைஞர்கள் 250 பேர் பங்கு கொள்ளவுள்ளனர் என வடமாகாண கல்வியமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி. என். ஸ்ரீதேவி அறிவித்துள்ளர். (ஸ்ரீ–2)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 110 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 100 |
| தக்காளி | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50-55 | 80 | 70 |
| கோவா | 70 | 100 | 60 |
| கரட் | 70 | 120 | 90 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 30-40 | 80 | 50 |
| வாழைக்காய் | 20-25 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 150 |
| பெரிய வெங்காயம் | 45 | 50 | 60 |
| பாகற்காய் | 80-100 | 150 | 140 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 90 | 80 |
| பயற்றங்காய் | 50-60 | 60 | 60 |
| லீக்ஸ் | 70 | 80 | 70 |
| பீற்றூட் | - | 80 | 80 |
| கறிமிளகாய் | 80 | 100 | 110 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 400 |
| போஞ்சி | - | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 80 | 60 |
| கீரை – 1 பிடி | 15 | 40 | 30 |
| தேசிக்காய் | 140 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 30-55 | 50 | 60 |

# இராசி பலன்

*18.05.2011*
*(வைகாசி 04 ,புதன்கிழமை)*
*சூரியஉதயம் காலை 5.54 மணிக்கு*
*பிரதமை பிற்பகல் 3.52 மணிவரை*
*அனுசம் முன்னிரவு 6.33 மணிவரை*
*இராகு காலம் 11.53-1.23 மணிவரை*
*சுபநேரம் 4.23-5.53 மணிவரை*
*அமிர்தசித்தம்*

**மேடம்** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், ஒரு வேலையை முடிக்க ஒரு தடவைக்கு பல தடவை அலைய நேரிடலாம், உடல் நலனில் கூடிய கவனம் தேவை.

**இடபம்** புதிய திட்டங்கள் வந்து சேரும், குடும்பத்தில் சந்தோசம் அதிகரிக்கும், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், செய் தொழிலால் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** வியாபார விருத்தி ஏற்படும் நாள், ஆரோக்கியம் சீராகும், கடனைக் கொடுக்கும் வாய்ப்புண்டு, வீட்டுப்பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வீர்கள்.

**கடகம்** நீண்ட நாளைய ஆசை நிறைவேறலாம், பிரியமான சிலரின் சந்திப்பு கிடைக்கும், பிள்ளைகளின் சிறு வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் விருத்தியுண்டு.

**சிங்கம்** சுப செய்திகள் வந்து சேரும் நாள், பெண்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், மாலையில் நல்ல சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி** உயர்வான சிந்தனைகள் மனதில் குடி கொள்ளும், தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள், உறவினர் உதவிக்கரம் நீட்ட முன்வருவர்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், உத்தியோக உயர்வுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் நாள், நண்பர்கள் ஒத்துழைப்பு வழைங்குவர், உறவினர் பகை மாறும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.

**தனுசு** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், பிரயாணங்களால் அலைச்சலுண்டு.

**மகரம்** வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்யும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும், தொழிலில் முன்னேற்றமுண்டு, உறவினர் வருகையால் மகிழ்வடைவீர்கள்.

**கும்பம்** தூரதேசச் செய்திகள் வந்து சேரலாம், தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள், உடல் நலம் சீராகும், புதிய முயற்சிகள் கைகூடும், போசனசுகமுண்டு.

**மீனம்** தடைகள் விலகி காரியங்கள் நடைபெறலாம், திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கலாம், தொழிலில் கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர், திடீர் பயணங்களால் நன்மையுண்டு.

வளவன்

# வடக்கிற்கும் தெற்கிற்குமான

# வரலாற்றுப் பெருமை மிக்க உறவுப் பாலம்



மாண்புமிகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ M.T.S. இராமச்சந்திரன் அவர்களைப் பாராட்டி கௌரவித்தபோது.

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது "புலம் பெயர் மக்களின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரும்", இந்து, பௌத்த கலாசார விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளருமான திரு. M.T.S. இராமச்சந்திரன் அவர்களது அயராத முயற்சியினாலும், அவர்களது சொந்தச் செலவிலும் வட பகுதியிலுள்ள 300 மாணவர்களுக்கு கடந்த ஒரு வருட காலமாக சிங்கள, ஆங்கிலம், ஜேர்மன் ஆகிய மொழியியல் கற்கை நெறியை இல. 29, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள Eu Lanka Forum நிறுவனத்தில் இலவசமாகப் போதிக்கப்பட்டது.

இப் பன்மொழியியல் இலவசக் கற்கை நெறிப் பாடங்களில் திறமைச் சித்தியடைந்த 55 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 06.05.2011 அன்று இராஜகிரிய கோதமி வீதியில் அமையப் பெற்ற சர்வதேச பௌத்த தகவல் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்தன தேரோ (பா.உ) அவர்களது தலைமையில் நடைபெற்றது.



கௌரவ மாலினி பொன்சேகரா M.P. சான்றிதழ் வழங்கும் வைபவ நிகழ்ச்சி.

இந்நிகழ்வில் கௌரவ கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன(பா.உ), மீள்குடியமர்வு பிரதி அமைச்சர் கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன்(பா.உ), அவர்களும் கௌரவ மாலினி பொன்சேகரா (பா.உ) அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

"யூரோப்பா பில்டங்ஸ் போரம்" நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் ஆங்கில ஆசானும் ஆன திரு.எஸ். நவரத்தினசாமி அவர்கள் மேற்படி நிறுவனத்தின் நோக்கம் அதன் செயற்பாடுகள் பற்றி உரை நிகழ்த்தினார்.

கௌரவ விருந்தினராகக் கலந்து இந்நிகழ்வினைச் சிறப்பித்து உரையாற்றிய வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்ன தேரோ (பா.உ) அவர் தமது உரையில் கடந்த கால யுத்த சூழ்நிலையின் பின்னர் வடக்கிற்கும் தெற்கிற்குமான கலாசார பாரம்பரியங்களுக்கான முக்கியமானதும் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதுமான உறவுப் பாலமாக இந்நிகழ்ச்சித் திட்டம் அமைந்துள்ளதனையிட்டுத் தான் பெருமைப் படுவதாகவும் இந்த சேவையினை திறம்பட இலவசமாக தனது சொந்த செலவில் நடத்தி முடித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களது 'புலம்பெயர் மக்களின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரும்' இந்து பௌத்த கலாசார விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் Europa Buildungs Forums நிறுவனத்தின் தலைவருமான திரு M.T.S. இராமச்சந்திரன் அவர்களை தான் நன்றியுடனும் பெருமையுடனும் பாராட்டுவதாகக் கூறினார்.

தொடர்ந்து சிறப்புரை நிகழ்த்திய கௌரவ உயர் கல்வி அமைச்சர் S.P.திசாநாயக்க (பா.உ) அவர்கள்:- நமது நாட்டில் மொழிவளம் மிக்க பிரஜைகளை உருவாக்குவதற்கு நாம் ஆரம்பப் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலும் பல்லாயிரம் கோடி ரூபாய்களைச் செலவு செய்கின்றோம். தமது அயராத முயற்சியினாலும் தனது சொந்த செலவிலும் தமது மக்களுக்கு இலவசமாக இப் பணியினை செவ்வனே செய்து முடித்துள்ள ஜனாதிபதி அவர்களது "புலம் பெயர் மக்களின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரும்" இந்து, பௌத்த கலாசார விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளருமான திரு. எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் அவர்களை நான் பாராட்டுவதில் பெருமையடைவதோடு மட்டுமல்லாமல் அவர் இந் நாட்டு மக்கள் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியவர் எனவும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து சிறப்புரை நிகழ்த்திய மீள்குடி அமர்வு பிரதி அமைச்சர் கௌரவ விநாயகமூர்த்தி முரளிதரன் (பா.உ) அவர்கள் இந்நாட்டின் யுத்த சூழலில் இருந்து நிறைந்த துன்பங்களுடனும் மாறாத வடுக்களுடனும் மறக்க முடியாத பாரிய இழப்புக்களுடனும் இன்னோரன்ன பல வாழ்வியல் சுமைகளோடும் மீண்டு வந்துள்ள தமிழ் மக்களது பிரச்சினைகள் ஜனநாயகரீதியில் பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒரு முக்கியமான காலகட்டத்தில் இது வரையில் எந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினராலோ மந்திரியாலோ அல்லது வேறு எந்த நிறுவனத்தினாலோ செய்யப்படாத இந்த மொழியியல் கற்கை நெறியினை இலவசமாக தமது மக்களுக்கு செய்து வெற்றி கண்டுள்ள திரு. M.T.S.இராமச்சந்திரன் அவர்களை நான் நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டுள்ளதாகவும் இதுவரையில் வடபகுதி மக்களின் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை அரசியல்ரீதியில் தீர்த்துக் கொள்வதற்கு அரசியல் வானில் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக திரு.M.T.S. இராமச்சந்திரன் அவர்கள் திகழ்ந்து வருவதையும் தன்னால் உணரமுடிகின்றது எனவும் குறிப்பிட்டார்.

இந்து, பௌத்த கலாசார விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளர் திரு M.T.S. இராமச்சந்திரன் அவர்கள் தமது உரையில்,

மொழிவளம் மனிதனுக்கு அணிகலன்கள் போன்றதாகும். மொழிவளம் கூடிய மனிதன் தனது நவீனத்துவத் தேடல்களுக்கு தன்னை தயார்ப்படுத்திக் கொள்வதோடு தனது கலாசாரப் பாரம்பரியங்களையும் இன்னோரன்ன மரபுரீதியிலான விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்து தமது இருப்புக்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் தனது நாட்டிற்கும் சமூகத்திற்கும் தன்னை தேவைப்பட்டவனாக்கி தம்மை எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து சிறந்த தீர்வுகளைப் பெற்று சுமுகமான வாழ்வியல் நெறிமுறைகளோடு வையகத்தில் வாழ்வாங்கு வாழ முடியும்.

தான் கடந்த 30 வருட காலமாக இலங்கையை விட்டுப் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் வடபகுதி தமிழ் மக்கள் பற்றித் தான் தினமும் சிந்தித்து செயலாற்றி அவர்களுக்குப் பல வழிகளிலும் உதவி வந்துள்ளதாகவும் புலம்பெயர்ந்து வந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்குத் தாம் நிரந்தர அரசியல் புகலிட அந்தஸ்துகளை ஐரோப்பிய நாடுகளில் பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் இன்னும் தமிழ் நெஞ்சங்களுக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உதவுவதற்கு தான் பல முன்னேற்றகரமான திட்டங்களுடன் செயற்பட்டு வருவதாகவும் தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியங்களை மேம்பட விருத்தி செய்து அவர்களின் துன்பியல் துயரங்களைத் துடைப்பதற்குத் தாம் ஒருபோதும் தயங்கப் போவதில்லை எனவும் தன்னை நாடி வருபவர்களுக்கு தனது சேவை என்றென்றும் எதிர்பார்த்தே இருப்பதாகவும் தனது மக்களுக்குச் சேவை செய்வதற்குத் தனது கதவு என்றும் திறந்தேயிருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

மதியபோசனத்துடன் நிறைவு பெற்ற இந்நிகழ்வின் பின்னர் இம்மாணவர்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் வணக்கத்திற்குரிய அத்துரலிய ரத்தின தேரோ (பா.உ) அவர்களால் வரவேற்கப்பட்டு சிற்றுண்டி அளித்துக் கௌரவிக்கப்பட்டனர். பின்னர் மாலை 6 மணியளவில் இம்மாணவர்கள் அலரிமாளிகையில் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் வரவேற்கப்பட்டு சிற்றுண்டி அளித்துக் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் உரையாற்றுகையில்,

வடக்கிற்கும் தெற்கிற்கும் உறவுப்பாலமாக அமைந்த இந்நிகழ்ச்சித் திட்டத்தினையிட்டுத் தான் பெருமைப்படுவதாகவும் இந்து பௌத்த கலாசார உறவுப் பாலத்தினை மேன்மையுறக் கட்டியெழுப்பிய வரலாற்றுப் பெருமை மிக்க புகழ் தனது 'புலம்பெயர் மக்களின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகரும்' இந்து பௌத்த கலாசார விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் Europa Buildungs Forums நிறுவனத்தின் தலைவருமான திரு.M.T.S. இராமச்சந்திரன் அவர்களையே சாரும் எனவும் அவரது இவ்வாறான சேவைகள் இந்நாட்டில் தொடர்வதற்குத் தான் அவரை வாழ்த்துவதாகவும் வடக்கிற்கும் தெற்கிற்கும் ஆன வரலாற்றுப் பெருமைமிக்க இந்த உறவுப் பாலம் புலம்பெயர்ந்து வாழும் ஒரு இலங்கைத் தமிழ் மகனால் செய்யப்பட்டு வருவதனையிட்டுத் தான் உவகையடைவதாகவும் இன்னும் இதுபோன்ற பல சேவைகளை புலம்பெ



M.T.S. இராமச்சந்திரன் அவர்கள் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரையாற்றுதல்.

யர்ந்து வாழும் மக்கள் இந்நாட்டிற்கு அவசரமாகவும் அவசியமாகவும் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இவ்வாறான சேவை நோக்கத்திலான வேலைத்திட்டத்தினை பௌத்த சிங்கள மக்களிடையே அவர்களது சுயவிருப்பத்தின் பேரில் நடைமுறைப்படுத்தி வெற்றி காண ஆவன செய்யுமாறு திரு. M.T.S. இராமச்சந்திரன் அவர்களை ஜனாதிபதி அவர்கள் மிகவும் விநயமாக வேண்டிக் கொண்டார்.



அலரிமாளிகையில் மாணவர்கள் வரவேற்கப்பட்டு ஜனாதிபதியின் கௌரவத்திற்கு உட்பட்ட நிகழ்வு.

## மொழியறிவே முழு உலகுக்குமான இணைப்புப் பாலம்

'மொழி தெரியாதவன் ஊமை' என்பது ஓர் முதுமொழி. இதன் உண்மையை இன்றைய நவீன உலகில் அல்லது அறிவியல் உலகில் நாம் நேரடியாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளதுடன், அதனால் நாம் எதிர்கொள்ளும் கஷ்டங்களினையும் பின்னடைவினையும் அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றோம்.

இந்த நேரடி உண்மையை உணர்ந்துகொண்ட M.T.S. இராமச்சந்திரன் அவர்களின் தனது தனிப்பட்ட முயற்சியால் சிங்கள, ஆங்கில, ஜேர்மன் மொழி அறிவினை எமது தமிழ் மாணவர்களுக்கு புகட்டி, அவர்களைக் கௌரவப்படுத்தி சான்றிதழ் வழங்க எடுத்த முயற்சிகள் மிகவும் பாராட்டத்தக்கது.

ஒரு நாட்டிற்குள்ளே நுழையவேண்டுமாயின் கடவுச்சீட்டு எப்படி அவசியமாகிறதோ அதேபோல் அந் நாட்டுக் குடிமகன் ஒருவரின் உள்ளத்தில் நுழைய வேண்டுமாயின் அந் நாட்டு மொழி மிகவும் அவசியமாகிறது.

(விளம்பர இலக்கம் சி- 3241)

# 40 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

வருடாந்தம் 40 இலட்சம் தென்னங் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு தீர்மா னித்துள்ளதாக தெங்கு அபிவிருத்தி மற்றும் தோட்ட முகாமைத்துவ அமைச்சு தெரிவித் துள்ளது.

இதன்படி 12 இலட்சம் தென்னங்கன்றுகளை இவ்வருடத்தில் மக்களுக்கு பகிர்ந்தளிக்க முடியும் என அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்துள்ளார்.

தென்ணங்கன்று தேவையுடையோர் தமது பிரதேசத்திற்கான தெங்கு சபையில் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அதனை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சாதாரண பைகளில் வளர்க்கப்பட்ட தென்னங்கன்றுகள் 65 ரூபாவிற்கும் பொலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்ட தென்னங்கன்றுகள் 125 ரூபாவிற்கும் தென்னை வளர்ப்பு சபையில் பெற்றுக்கொள்ள முடியும் என தெங்கு அபிவிருத்தி மற்றும் தோட்ட முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் சுனில் சிறிசேன தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தடை செய்யப்பட்ட உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடித் தொழில்

## கடற்றொழிலாளர்கள் தெரிவிப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அரசாங்கத்தால் கடல் வளத்திற்குப் பாதிப்பு என தடை செய்யப்பட்டுள்ள கடற்றொழில் உபகரணங்கள் பயன்படுத்தப்படுவதாகக் கடற்றொழிலாளர்கள் சிலர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

தடைசெய்யப்பட்ட தொழில்களுக்கான தடை செய்யப்பட்ட உபகரணங்களான தங்கூசி படுப்பு வலை, தங்கூசி கரை வலை மற்றும் வேறு பல உபகரணங்கள் தொழிலுக்காகப் பயன்படுத்தப்படுவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கடற்றொழிலுடன் தொடர்புடைய சங்கம், சமாசம், கடற்றொழில் பரிசோதகர்கள் மற்றும் கடற்றொழில் சார்ந்த அரச அதிகாரிகள் நடவடிக்கையினை மேற்கொண்டு இவ்வாறான உபகரணங்களின் பாவனையை நிறுத்தி கடற்றொழிலை மேம்படுத்த வேண்டுமெனகடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-64)

# லண்டனில் இடம்பெற்ற குழு மோதலில் யாழ். இளைஞர்கள் இருவர் படுகாயம்

லண்டனில் இடம்பெற்ற இரு தமிழ் குழுக்களுக்கு இடையிலான மோதல் காரணமாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்கள் படுகாயடைந்துள்ளனர்.

குரொய்டொன்னில் வசிக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களுக்கும் டூடிங் தமிழ் இளைஞர்கள் குழுவிற்கும் இடையில் மேற்கு குரொய்டோன் லண்டன் வீதியில் மோதல் இடம்பெற்றுள்ளது. 27 வயது மற்றும் 18 வயதுடையவர்களே இம்மோதலில் படுகாயமடைந்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர்களது நிலை மோசமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து பொலிஸ் பேச்சாளர் தெரிவிக்கையில், குரோய்டொன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 19 வயது மற்றும் 20 வயது இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

லண்டனில் தெற்குப் பகுதியில் இரகசியமாக வாழ்ந்து வருகின்ற வன்முறைகளுக்கு பெயர் போன குழுவொன்று லண்டனில் டூடிங் குரொய்டன் மற்றும் மெர்டொன் ஆகிய பகுதிகளில் போராட்டப் படத்திற்கான படப்பிடிப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிப்பு செய்யப்பட்டதை அடுத்து இந்த மோதல் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் இளைஞர்கள் இவ்வாறான குழுக்களில் இணைந்து வருவதே இந்த முரண்பாடுகளுக்குக் காரணமாக உள்ளது என்று தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் ஒருவரான பெட்ரிக் ரட்ணராஜா தெரிவித்துள்ளார்.

லண்டன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதுகுறித்து ஏற்கனவே அறியப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான தீர்வை எட்டும் முகமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)


சேவை நலன் பாராட்டு

திரு ஐயாத்துரை நடராசா SLPS-I



எமது பாடசாலையில்
அதிபராக கடமையாற்றி
இன்றுடன் ஓய்வு பெறும்
அதிபர் திரு. ஐ. நடராசா
அவர்களை ஓய்வுக்
காலத்தில் சிறப்புற வாழ
வேண்டுமென்று வேண்டி
வாழ்த்துகின்றோம்.

யா/கரணவாய் மகா வித்தியாலயம்,
ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பா. அ. சங்கம்.

(சி-3240)



இன்று முதல் சாவகச்சேரியிலும்...

Midea Electro Mart

Midea PC Show Room



Authorized Dealer for Abans Ltd.

யாழ். நகரில் முன்னணி நிறுவனமான Midea Electro Mart
இணை நிறுவனமான Midea PC Show Room தனது
கிளையை இன்று 18.05.2011 புதன்கிழமை அனுஷ
நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய
கர்க்கடக லக்கினம் முற்பகல் 10.14-11.26 வரையான
சுப முகூர்த்த வேளையில்
இல.4, நவீனசந்தை, சாவகச்சேரி
எனும் முகவரியில்
திறந்து வைக்கப்படவுள்ளது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உரிமையாளரும், ஊழியர்களும்.

Abans

NO.4, NEW MARKET, CHAVAKACHCHERI. Tel: 021-2270268 Fax: 021-2270129

No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

e-mail:midea21@gmail.com
www.mideamart.com

## உங்களுக்குத் தெரியுமா? பாடசாலை மட்டப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான உங்களுக்குத் தெரியுமா? பாடசாலை மட்டப் போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான வினாத்தாள் பொதிகள் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்படவுள்ளன.

அதிபர்கள் இவ்வினாத்தாள் பொதியை எதிர்வரும் 24 ஆம் திகதி வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்று போட்டிகளை நடத்தலாம் என வடமராட்சி வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. விஜயலட்சுமி சுகுமாரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரை புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

★ ★ ★ ★ ★ ★

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 3 இல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை மொழிப்பாடமும் 29 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் கணித பாடமும் யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளதென வடமராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலும் செயலமர்வுக்கு சமுகமளிக்கும் ஆசிரியர்கள் இவலச பாடநூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் கேட்டுள்ளார். (ஸ்ரீ-19)

## பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

(சாவகச்சேரி)

மந்துவில் புளியந்திடல் ஸ்ரீகந்தசாமி கோயில் பொதுச் சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலக இந்து சமய அபிவிருத்தி உதவியாளர் செல்வி.சந்திரா கணபதிப்பிள்ளை கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்குவார். (ஸ்ரீ-29)

# வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான சமூக விஞ்ஞானப் போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான சமூக விஞ்ஞானப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுகிழமை நடைபெறவுள்ளது.

இப்போட்டியானது பருத்தித்துறைக் கல்விக் கோட்டப் பாடசாலைகள் மற்றும் குடத்தனை அ.த.க பாடசாலை மற்றும் குடத்தனை றோ.க.த.க பாடசாலை, மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, குடத்தனை அ.மி.த.க. பாடசாலை, நாகர் கோவில் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு யா/வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

அத்துடன் கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கு யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி மீளக் குடியமர்ந்த பாடசாலைகளுக்கு மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையிலும் இடம்பெறும்.

அத்துடன் தரம் 6,7இக்கு காலை 9.30 தொடக்கம் 10 மணி வரையும் தரம் 8,9 க்கு காலை 10.15 தொடக்கம் 11.15 மணி வரையும் தரம் 10,11 க்கு காலை 11.30 தொடக்கம் 12.30 மணி வரையும் தரம் 12,13 க்கு காலை 11.30 தொடக்கம் 12.30 மணி வரையும் இப் போட்டி நடைபெறவுள்ளது.

போட்டியாளர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)




# கரப்பந்தாட்ட இறுதிச்சுற்றில் ஆவரங்கால் மத்தி.வி.க.சம்பியன்

(சாவகச்சேரி)

கடந்த 14 ஆம் திகதி மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்ட இறுதிச் சுற்றுப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் கழக அணியை எதிர்த்து ஆடிய ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் 4 அதிகப்படியான கோல்களால் வெற்றி பெற்று இவ்வாண்டிற்கான சம்பியன் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (ஸ்ரீ-29)

# வடமராட்சி கிழக்கில் புனரமைப்பு திட்டங்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் சில கிராம அலுவலர் பிரிவுகளில் அரசசார்பற்ற நிறுவன உதவிகளுடன் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம், யு.என்.டி.பி, சோஆ நிறுவனங்களின் உதவியுடன் செம்பியன் பற்று, மாமுனை, செம்பியன் பற்று வடக்கு கிராம அலுவலர் பிரிவுகளில் பாலர் பாடசாலை அமைத்தல், பூங்கா அமைத்தல், பொது நோக்கு மண்டபம், முன்பள்ளி கட்டடங்கள் சனசமூக நிலையங்கள், தூர்ந்து போன குளங்கள் என்பன புனரமைக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-10)

# உதைபந்தாட்ட போட்டியில் கரவெட்டி பி.செ. அணி சம்பியன்

(கரவெட்டி)

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் கரவெட்டி பிரதேச செயலக அணி வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாகியுள்ளது.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் விளையாட்டுப் போட்டிகளில் ஒரு அங்கமாக உதைப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதா னத்தில் இடம்பெற்றது.

இதில் இறுதிப் போட்டிக்கு கோப்பாய் பிரதேச செயலக அணியும் கரவெட்டி பிரதேச செயலக அணியும் மோதியது.

இதில் 0:2 என்ற கோல் கணக்கில் கரவெட்டி பிரதேச செயலக அணிவெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாகியுள்ளது. (ஸ்ரீ-24)

## கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான அணிக்கு 5 ஓவர் 6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.கரவெட்டி பிரதேச 17 இளைஞர் கழகங்களுக்கிடையில் இப் போட்டி அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை இடம் பெறவுள்ளதென பொறுப்பாளர் வரதராஜன் மனோராஜ் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-24)

## பொதுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நிறுவனத்தின் பணிமனையில் நிறுவனத் தலைவர் பா.இரகுநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிறுவனத்தில் அங்கத்துவம் வகிக்கும் சகல சங்கங்களையும் தவறாது உரிய நேரத்திற்கு சமுகமளித்து ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஸ்ரீ-19)

## சிறப்பு பட்டிமன்றம்

(சாவகச்சேரி)

மீசாலை மாவடிப் பிள்ளையார் ஆலய பூங்காவனத் திருவிழா இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பட்டிமன்றக் குழுவினரின் சிறப்புப் பட்டிமன்றம் ஆடவரின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவுவது தாயா தாரமா எனும் தலைப்பில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்விற்கு வைசப் புலவர் பொன் சுகந்தன் தலைமை தாங்கவுள்ளார். (ஸ்ரீ-29)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை தேவி பாகவதம் என்னும் விடயம் பற்றி யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் தொடர் சொற்பொழிவாற்றுவார். (ஸ்ரீ-35)

## கள் விற்பனை நிலையங்கள் தவிர ஏனைய இடங்களிலும் கள் விற்பனை

வடமராட்சி கிழக்கு, பொற்பதி, குடத்தனை மணற்காடு, அம்பன் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கள் விற்பனை நிலையங்களை விட கள் உற்பத்திசெய்யும் மரங்களுக்கு கீழும் ஏனைய இடங்களிலும் கள் விற் பனை இடம் பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதைவிட கிராமங்களில் சட்ட விரோதமான மதுபான விற்பனை, கசிப்பு விற்பனை என்பன இடம்பெறுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் நடவடிக்கையையினை மேற்கொண்டு தடுத்து நிறுத்த வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-64)





இந்திய கல்விக் கண்காட்சி நேற்று யாழ்.பொதுநூலகத்தில் ஆரம்பமானது. இக்கண்காட்சியை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரத்தினம் நாடா வெட்டித் திறந்து வைப்பதனையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதனையும் கண்காட்சியை மாணவர்கள் பார்வையிடுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)


# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை

## 2011 (ஆகஸ்ட்) மாதிரி வினாத்தாள் - 04


ஆசிரியர் :- T.திலிப்குமார்
விவேகானந்தா தேசிய கல்லூரி,
கொழும்பு -13

**பகுதி - I**

☛ 1ம், 2ம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஏதோ இரண்டு உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்புண்டு. இவ் இரண்டு உருக்களையும் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையின் கீழ் கோடிடுக.


01) 


1) Aயும் Cயும் 2) Dயும் Fயும் 3) Aயும் Eயும்


02) 


1) Aயும் Dயும் 2) Bயும் Dயும் 3) Aயும் Fயும்

☛ 3ம், 4ம் வினாக்களில் தரப்பட்ட உருக்களில் யாதாயினும் ஒரு உரு ஏனைய உருக்களில் இருந்து வேறுபட்டது. அவ்வுருவின் கீழ் கோடிடுக.

03) 

1) 2) 3) 4)

04) 

1) 2) 3) 4)

☛ பின்வரும் பாடலை வாசித்து 5ம், 6ம் வினாக்களிற்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

*கடமையை உணர்ந்து செயல்பட ஆசை!*
*கடின உழைப்பால் வென்றிட ஆசை!*
*மடமையைக் கொளுத்த மனதினில் ஆசை!*
*மனிதனாய் வாழ்ந்து புகழ் பெற ஆசை!*

05) எவற்றால் நாம் வெற்றியைப் பெறலாம்?
1) கடமையால் 2) மடமையால் 3) கடின உழைப்பால்

06) மனிதனாய் வாழ்ந்தால் எவற்றைப் பெறலாம்?
1) புகழ் 2) வெற்றி 3) மடமையைக் கொளுத்தலாம்


07) 
உருவை நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.
1) மின்சாரம் - சைக்கிள் - ஒளி
2) மின்சாரம் - கார் - வெளிச்சம்
3) மின்சாரம் - சைக்கிள் - ஒலி

08) கீழே சம்பவங்கள் சில தரப்பட்டுள்ளன.


A - உணவருந்தல்
B - பல்துலக்கல்
C - நித்திரை விட்டெழுதல்
D - பாடசாலைக்குச் செல்லல்
E - நீராடல்

மேலே தரப்பட்டுள்ள சம்பவங்களின் சரியான ஒழுங்கு வரிசை யாது?
1) CBEDA 2) CBEAD 3) CBAED


09) உருவைப் பார்த்து வெற்றிடத்திற்கு பொருத்தமான உருவை தெரிவு செய்க.





10) சதுர வடிவான கடதாசியை சமச்சீராக இரண்டு தடவை மடித்து படத்தில் காட்டியவாறு கோட்டினூடாக வெட்டினால் பெறப்படும் சரியான உருவின் கீழ் கோடிடுக.




☛ கீழ்வரும் உருக்களில் தரப்பட்டுள்ள இலக்கங்கள் அமைந்துள்ள கோலத்தை அவதானித்து இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான எண்ணின் கீழ் கோடிடுக.


11) 


1) 11 2) 13 3) 15

12) 



1) 32 2) 20 3) 12

13) இவ்வுருவை உருவாக்க பயன்படுத்தப்பட்ட சிறிய சதுரமுகிகள் எத்தனை?



1) 23 2) 24 3) 27


☛ பின்வரும் தரவுகளை அவதானித்து 14ம், 15ம் வினாக்களிற்கு விடை தருக.




14)  இன் பெறுமதி யாது?
1) ரூ. 15 2) ரூ. 12 3) ரூ. 10

15)  இன் பெறுமதி யாது?
1) ரூ. 10 2) ரூ. 12 3) ரூ. 15

☛ கீழே காணப்படுவது கனவுரு ஒன்று செய்வதற்காக வெட்டப்பட்ட கடதாசி அட்டையாகும். அதனை அடிப்படையாகக் கொண்டு 16ம், 17ம் வினாக்களிற்கு விடை தருக.




கனவுரு உருவாக்கிய பின்

16) C என்ற எழுத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
1) A 2) E 3) F

17) E என்ற எழுத்திற்கு எதிர்ப்பக்கத்தில் உள்ள எழுத்து யாது?
1) A 2) F 3) D

18) ஆலயத் திருவிழா ஒன்றிற்காக வீதியில் சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்ற ஒழுங்கில் நான்கு வர்ண மின்குமிழ்கள் மாறி மாறி பொருத்தப்பட்டன. ஆரம்பத்தில் சிவப்பு மின்குமிழ் பொருத்தப்பட்டதெனில் 23வதாக பொருத்தப்பட்ட மின்குமிழின் நிறம் யாது?
1) பச்சை 2) மஞ்சள் 3) நீலம்

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படுத்த புலம்பெயர் தமிழர்கள் முயற்சி

## ஐரோ. ஒன்றியத்திற்கான இலங்கை தூதுவர் குற்றச்சாட்டு

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் புலம்பெயர் தமிழர்கள் செயற்பட்டு வருவதாக ஐரோப்பிய ஒன்றியத் திற்கான இலங்கைத் தூதுவர் ரிவந்த ஆரிய சிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஐரோப்பிய ஒன்றியத்தில் முறியடிக் கப்பட்டமை மகத்தான வெற்றியாகக் கருதப் பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் கடுமையான முயற்சி தோல்வியடைந்துள்ளதாகவும் ஐரோப் பிய நாடுகளின் இலங்கை தொடர்பான நிலைப் பாட்டில் ஓர் திருப்புமுனையாக இந்த நடவடிக் கைகளை நோக்க முடியும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான போலியான பிர சாரங்களுக்கு இடமளிக்கப்படக் கூடாது என வும் உண்மை நிலைமைகளை ஐரோப்பிய நாடுகளினது பிரதிநிதிகளுக்கு அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டுமென அவர் வலியு றுத்தியுள்ளார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் சமா தானத்தில் மெய்யாகவே ஆர்வம் காட்டியி ருந்தால் 2003 ஆம் ஆண்டு புலிகள் சமா தான முனைப்புக்களிலிருந்து விலகியபோது தடுத்து நிறுத்தியிருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஈழக் கனவை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை காணப்பட்ட வரை யில் சர்வதேச தலையீடு பற்றி இந்தப் புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் அக்கறை காட்ட வில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது சர்வதேச யுத்தக் குற்றச் செயல் கள் தொடர்பில் முதலைக் கண்ணீர் வடிக்கும் தரப்பினர் புலிகள் யுத்த முனைப்புக்களை மேற்கொண்டபோது மௌனித்திருந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் ஏற் படுத்தும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்ற முனைப்பு காட்டப்பட்ட தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களின் ஒரு பிரிவினர் தொடர்ந்தும் நாட்டில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த தீவிர ஆர்வம் காட்டி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஸ்ரீ-2)

# பொன்சேகாவுக்கு ஓய்வு அவசியம் மருத்துவர்கள் பரிந்துரை

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன் சேகாவிற்கு ஓய்வு அவசியம் என மருத்துவர் கள் பரிந்துரை செய்துள்ளதாக ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஒன்று அல்லது 2 வாரங்கள் சரத் பொன் சேகா ஓய்வில் இருக்க வேண்டுமென வலியு றுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

தற்கொலை குண்டுத் தாக்குதலினால் சுவாசப்பைக்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ள தாகவும் இதனால் புழுதியற்ற தூய்மையான சிறைச்சாலை அறையொன்று சரத் பொன் சேகாவிற்கு வழங்கப்பட வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில நாட்களாக பொன்சேகாவின் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் மருத்து வர்களின் அறிக்கையை நீதிமன் றில் சமர்ப் பித்து சலுகைகளைப் பெற்றுக் கொள்ள உத் தேசித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள் ளார். (ஸ்ரீ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக் குட்பட்ட குருநகர் பொதுச் சுகாதாரப் பரி சோதகர் பிரிவிற்குட்பட்ட வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை சுண்டுக்குளி பாடசாலைச் சந்தி யிலும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை சுவாட்ஸ் ஒழுங்கையிலும் வைத்து வழங்கப்படவுள்ளது.எனவே இச்சந்தர்ப்பத் தைப் பயன்படுத்தி மேற்படி ஊசியினைத் தங்களது வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றிக் கொள் ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந் திருக்கும் பெரியாழ்வார் ஆசிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர் வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ஆன்ம ஈடேற்றம் எனும் விடயம் பற்றி யாழ்.சின் மயா மிஷன் பிரம்மச்சாரி யாக்கிரத் சைதன்யா சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வில்வம்பூ


**Botanical Name: Aegle mar -melos**
**Family: Rutaceae**
**English: Bael fruit tree**
**Sinhala: Beli**

தற்போது உஷ்ணத்தின் தாக்கத்தால் உடலில் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. அதுவும் பித்த சம்பந்தமான நோய்கள் கூடுதலாக ஏற்படும். இந்நோய் கள் அசௌகரியங்களிலிருந்து விடுபடுவ தற்கு நாம் அன்றாட உணவில் வைத்தியம், பழக்கவழக்கங்களையும் பருவகாலத்திற்கு ஏற்ப மாற்றிக் கொள்வதால் மேற்படி நிலைமை களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். இப்பருவ காலத்திற்கு வில்வம்பூ அருமருந்தாகும்.

இயற்கையின் படைப்பில் கூட வில்வம் பூக்களை வில்வ மரங்களில் வைகாசி மாதத் தில் காணலாம். அதிலும் பெரும்பாலும் பூக் காமல் காய்க்கும் மரங்களில் வில்வ மரமும் ஒன்றாகும். இதில் பல்வேறு இனங்கள் உண்டு. அரிதாகத்தான் வில்வமரம் பூத்துக் காய்க்கும். எனவே இக்காலங்களில் வில் வம் பூக்களை சேகரித்து பயன்படுத்துதல் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும். இம்மரம் சுமார் 10 தொடக்கம் 12 மீற்றர் உயரம் வரைக்கும் உயர்ந்து சிறிது படர்ந்து வள ரும். பெருங்கிளைகளைத் தவிர மற்ற சிறு குச்சிகளெல்லாம் இலை, காம்போடு இணைந் துள்ள பெரும் முட்களைக் காணலாம். சில வகை மரங்களில் முட்களதிகமில்லை. மூன்று இலைகள் சேர்ந்தாற் போல ஒரு காம்பிலை இணைந்திருக்கின்றன. சிறிது மஞ்சள் கலந்து வெண்ணிறமும் நல்ல மணமும் உடைய ஒவ்வொரு பூவிலும் ஐந்திதழ்கள் உண்டு. மிகமிக அபூர்வமாக இதில் நான்கு இதழ்க ளையும் காணலாம்.

**பரம்பலும் இனவிருத்தியும்**

பெரும்பாலும் எல்லா இடங்களிலும் காணலாம். கோவில்களில் பெரும்பாலும் பயிரிட்டு வளர்க்கப்படுகின்றது. நன்றாக பழுத்துத் தானே விழுந்துள்ள பழத்தின் விதை களை சேகரித்து இனவிருத்தி செய்யலாம். விதைக்கு முன் விதைகளை சாம்பலுடன் கலந்து நன்கு தேய்த்து அதன்பின் விதைக்க வேண்டும்.



**மருத்துவக் குணங்கள்**

★வில்வம் பூவானது காயகற்ப மூலிகை யாகும். வில்வம்பூக்கள் 1/2 கிலோ எடுத்து 2 லீற்றர் நீரிலிட்டுக் காய்ச்சி 400 மில்லி லீற் றராக குடிநீர் காய்ச்சி, கசக்கி வடிகட்டி பிழிய வும். தேவையானளவு தேன் அல்லது பனை வெல்லம் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்தில் இறக்கிக் கொள்ளவும். 10 மில்லியிலிருந்து 60 மில்லி வரை நீர் கலந்து சாப்பிடவும். நாவ றட்சி, உடல் உஷ்ணம் தணிந்து உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும்.

★வில்வ மலர்களைச் சேகரித்து நிழலில் உலர்த்திக் கொள்ள வேண்டும். பின் இதனை இடித்துத் தூளாக்கிக் கொள்ள வேண்டும். இந்தத் தூளில் இரண்டு தேக்கரண்டி நெய் யில் குழைத்து ஒரு நாளைக்கு இரண்டு வேளை உட்கொள்ள வேண்டும். தொடர்ந்து 3 நாட்கள் உட்கொள்ள பசிமந்தம் அகன்று நல்ல பசி உண்டாவதோடு கல்லீரல் கோளா றுகளும் பித்த சம்பந்தமான நோய்களும் தணியும்.

அல்லது வில்வ மலர்களை பறித்த உடனே பச்சையாக அரைத்து பசுவின் பாலில் கலந்து சிறிது தேன் சேர்த்து உட்கொண்டாலும் உடல் குளிர்ச்சியடைந்து நல்ல பலனைக் கொடுக்கும்.

★ஒரு கைப்பிடியளவு காய்ந்த வில்வ மலர் களைச் சேகரித்து 150 மில்லி நீரில் இரவு முழுவதும் ஊறவைத்து காலை யில் வடிகட்டி குடிக்க வேண்டும்.

இவ்வாறு தொடர்ந்து 3 நாட் கள் குடிக்க உடற் சூடு தணிந்து அதிகதாகம் அடங்கும். பசி ஏற் படும். மலச்சிக்கல் நீங்கும்.

★உலர்ந்த வில்வ மலர்க ளைத் தூளாக்கி சலித்தெடுத்து இரண்டு தேக்கரண்டி தூளை 150 மில்லி பசுவின் பாலில் விட்டு அரைத்து தேனைக் கலந்து உட் கொண்டு வர நரம்புத் தளர்ச்சி நீங்கும். மூளையில் இயக்கம் சுறுசுறுப்படையும். இரத்த ஓட்டம் சீராகும்.

★காய்ந்த வில்வமலர்களை சேகரித்துத் தூளாக்கி சமஅளவு சிகைக்காய்த் தூளுடன் கலந்து அன்றாடம் காலையில் உடலில் தேய்த்து குளித்தால் தோல் நோய்கள் வராமல் இருப் பதோடு தோல் மினுமினுப்பாகவும் வியர்வை நாற்றமின்றியும் இருக்கும்.

★காய்ந்த வில்வமலர்களைப் புளி சேர்க் காமல் ரசமாகத் தயாரித்து உணவுடன் சேர்த்து உண்டால் குடல் இயக்கம் வலிமைபெறும். குடல் தொடர்பான நோய்கள் வராது. மலச் சிக்கல் அகன்று விடும்.

★வில்வம் பூக்களைக் கொண்டு தயாரிக் கப் படும் லேகியம் உடல் வலிமையை ஏற்ப டுத்துவதோடு நரம்புமண்டல இயக்கம் சுறு சுறுப்படையும், நல்ல ஜீரணசக்தி உண்டா கும்.

| | |
|---|---|
| வில்வ மலர்கள் | 500கிராம் |
| கற்கண்டுத்தூள் | 250 கிராம் |
| தேன் | 100 கிராம் |
| ஏலம் | 20 கிராம் |
| சுக்கு | 10 கிராம் |

ஏலத்தையும் சுக்கையும் (தோல் சீவி) பொடித்து போட்டு கற்கண்டை பாகு போல கிளற வேண்டும். பின்பு மலர்கள் நன்றாக வெந்ததும் இறக்கி தேனைச் சேர்த்து நன்கு கிளறி தக்க பாத்திரத்தில் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். நெல்லிக் காயளவு காலை, மாலை சாப்பாட்டின் பின் உட்கொண்டு உடனே பசுவின் பாலை அருந்த வேண்டும்.

குழந்தைகட்கு அளவு அரைவாசியாக குறைத்துக் கொடுக்க வேண்டும். குழந்தை களின் உடல் வளர்ச்சி சிறப்பாக அமையும். ஆரோக்கியம் சிறப்படைந்து, நல்ல ஜீரண சக்தி ஏற்படும்.

**வில்வம்பூ கோப்பி பவுடர்**

| | |
|---|---|
| வில்வம்பூ (உலர்ந்தது) | 1/2கிலோ |
| கொத்துமல்லி | 1/2கிலோ |
| ஏலம் | 25 கிராம் |
| சுக்கு (வேர்க்கொம்பு) | 20 கிராம் |
| நற்சீரகம் | 100 கிராம் |

★வில்வம்பூ தவிர மற்றவைகளைத் தூய்மைப்படுத்தி வாணலியில் போட்டு வறு த்து இறக்கும் தருணம் வில்வம்பூக்களை யும் சேர்த்து வறுத்து, இடித்து துணியில் அரித்து பத்திரப்படுத்துக. கோப்பிக்குப் பதி லாக இதனைப் பயன்படுத்துவதால் உடல் உஷ்ணம் தணிந்து, நரம்பு மண்டலம் பலப் படுவதோடு உடலையும் பலப்படுத்தும் சிறந்த கோப்பியாகும்.

திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S.)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.


*குறிப்பு: வைகாசி மாதத்தில் வில்வம் பூக்களைச் சேகரித்து பருவகாலத்திற்கேற்ப பயன்படுத்தி நோய்களிலிருந்து விடுபட வும் உடற்பலத்தை மேம்படுத்த வேண்டு மென்பதற்காகவே இம்மாதத்தில் இவ்வில் வம்பூக்களின் மருத்துவப் பயன்கள் தரப் பட்டுள்ளன.*

# இலங்கையை உலுப்பிவரும்

# ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை

125. இறுதிக்கட்டத்தின் ஆரம்பத்தில், 2009 ஜனவரி 13ஆம்திகதி, சுயாதீன மதிப்பீடுகளின் படி வன்னிப்பிரதேசப் பொதுமக்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 50ஆயிரத்திற்கும் 2இலட்சத்து 50ஆயிரத்திற்கும் இடைப்பட்டதாக இருந்தது என அரசாங்க இணையத் தளம் தெரிவித்தது. ஆரம்பத்தில் ஐ.நா.வின் மதிப்பீடு 2இலட்சத்து 50ஆயிரமாக இருந்தது. (பின்னர் அந்த மதிப்பீடுகள் அதிகமாக இருந்தபோதிலும்) பின்னர் 2009 ஜனவரியில் வன்னியிலிருந்த பொது மக்கள் எண்ணிக்கை மதிப்பீட்டின் படி 75ஆயிரத்திற்கும் கூடிய ஒருஇலட்சத்திற்கும் இடைப்பட்ட தாக இருந்தது என பாதுகாப்பு அமைச்சுக் கூறியது. ஆயினும் வன்னியிலிருந்த பொதுமக்களின் சரியான எண்ணிக்கையை பிழையற்ற முறையில் மதிப்பீடு செய்வதற்கான போதியளவை விஞ்சிய தகவல் அரசாங்கம் வசம் இருந்தது. ஒவ்வொரு மாதமும் உலக உணவுத் திட்டத்திலிருந்து உலர் உணவுப் பங்கீடுகளைக் கோருவதற்காக அரசாங்க அதிபர்கள் ஐ.டி.பி. யினர் பற்றிய தரவுகளை ஒப்பிட்டுப் பார்த்து வந்துள்ளனர். 2008 செப்ரம்பருக்கு முன் அச்சமயம் எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுமார் 4இலட்சத்து 20ஆயிரம் பொதுமக்கள் இருந்ததாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி அரசாங்க அதிபர்களினால் தொகுக்கப்பட்ட எண்ணிக்கைகள் குறிப்பிட்டன.

இவ்வெண்ணிக்கைகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருக்கலாம்



என்றிருந்த போதிலும் ஐ.நா. சிறுவர் நிதியத்தின்படி வன்னியில் பதிவு செய்யப்பட்டிருந்த பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை70 ஆயிரம் ஆக அதாவது அரசாங்கத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கைக்குச் சமமானதாக இருந்தது.

126. பின்னர் பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்ட எண்ணிக்கைகள் மாறுபட்டதாக இருந்த போதிலும் வேண்டுமென்றே அவை குறைவாகவே வைக்கப்பட்டிருந்ததோடு, வலயத்தில் தொழில்புரிந்த சில அரசாங்க ஊழியர்கள் வேறு கணக்குகளை அல்லது தேவைக்கான வேறு மதிப்பீடுகளை வழங்கியபோது அவர்கள் கண்டிக்கப்பட்டனர். உதாரணமாக, 2009 பெப்ரவரி 2ஆம் திகதி இரண்டாவது யுத்தசூன்ய வலயத்தில் இருந்து உதவிஅரசாங்க அதிபர் முல்லைத்தீவு மாவட்டத்தில் அச்சந்தர்பத்தில் சுமார் 81ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் சுமார்3இலட்சத்து 30ஆயிரம் ஆட்கள் இருப்பதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு நிலைமை பற்றிய அறிக்கை ஒன்றை அனுப்பியிருந்தார். ஆயினும், மார்ச் 18ஆந்திகதி 3இலட்சத்து 30 ஆயிரம் என்ற அக்கணக்கு, "விதிகளுக்கு கட்டுப்படாததும் அடிப்படையற்றதும்" எனவும் "குறிப்பாக ஐ.டி.பி. கணக்குகள் தொடர்பாக எந்த வொரு மூலத்திற்கும் தவறான தகவலை வழங்கியதற்காக" அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க அரசாங்கம் "விருப்பத்திற்கு எதிராக நிர்பந்திக்கப்படும்" எனவும் உதவி அரசாங்க அதிபருக்கான பதிலில் தேசத்தைக் கட்டியெழுப்பல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

(48) 127. 2009 பெப்ரவரி இறுதியில், இடம்பெயர்தோர் குடிசைகளைக் கணக்கெடுத்து மற்றும் வேர்ல்ட்வியூ செய்மதிப் படங்களை ஒரு பகுதியாக வைத்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் படி, எல்.ரி.ரி.ஈ. இன் கட்டுப்பாட்டுப் பகுதியில் 2இலட்சத்து 67ஆயிரத்து 618 பொதுமக்கள் இருப்பதாக அது கருதுவதாக ஐ.நா. குழு அரசாங்கத்துக்கு அறிவித்தது. ஏப்பிரல் கடைசியில் ஐ.நா.வின் மதிப்பீடுகளின்படி தொடர்ந்தும் ஒரு இலட்சத்து 27ஆயிரத்து 177 பொதுமக்கள் சிக்குண்டிருந்தனர் என்ற போதிலும் அக்காலப்பகுதியில் 10ஆயிரம் பேர்கள் மாத்திரமே எஞ்சியிருந்தனர் என அரசாங்கம் கூறியது. இறுதியாக அப்பிரதேசத்தில் இருந்து வெளியேறிய மற்றும் மெனிக்பாம் அத்துடன் வேறு முகாங்களில் குடியமர்த்தப்பட்ட இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை சுமார் 2இலட்சத்து 90 ஆயிரமாக இருந்தது.

இவ்வெண்ணிக்கைக் கிடையிலான வேறுபாட்டினை போதியளவு அரசாங்கம் விளக்கவில்லை.

128. அரசாங்கத்தின் குறைவான மதிப்பீட்டின் விளைவாக வன்னிக்கு உலக உணவுத்திட்டத்தினால் வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் நிஜத் தேவையைவிட மிகக்குறைவாக இருந்ததால் பட்டினிச் சாவு மற்றும் போசாக்கின்மை அங்கு பரவலாகக் காணப்பட்டது. அதேபோன்று வன்னிப் பிரதேசத்திற்கு அனுமதிக்கப்பட்ட மருந்துவகைகள் ஷெல்வீச்சுக் காரணமாக ஏற்பட்ட காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு கொஞ்சம் கூடப் போதியதாக இருக்கவில்லை. மார்ச் 2010 இல் காயமடைந்தோர் எண்ணிக்கை அதிகரித்த போது தேவைப்படும் மருந்துவகைகள் இல்லாது பாரிய கஷ்டங்களுக்கும் தேவையற்ற உயிரிழப்புகளிற்கும் வழிகோலியது. ஆர்.டி.எச். வைத்தியர்கள் தொடர்ந்து மருந்து பற்றாக்குறை பற்றி கடிதங்கள் மற்றும் தொலைக்காட்சிகளூடாகவும் தெரிவித்த போது ஊடகங்களுடன் பேசுவதை, புகார் செய்வதை நிறுத்து மாறும் அல்லது அவர்கள் தண்டிக்கப்படுவார்கள் எனவும் அவர்களை சுகாதார அமைச்சு எச்சரிக்கை செய்தது.



129. .2009 மார்ச் 19ஆம் திகதி முள்ளிவாய்கால் ஆஸ்பத்திரியில் தேர்ச்சிபெற்ற மயக்கமருந்து கொடுக்கும் வைத்தியர்கள் இல்லாததால் கடுமையான வலித்தடுப்பு மருந்துகளும் நரம்புக்குள் செலுத்தும் திரவங்களை மாத்திரமே அனுப்ப முடியும் என சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சின் செயலாளர் வைத்தியர்களுக்கான பதிலில் தெரிவித்தார். இந்திய உயர்ஸ்தானிகருக்கு அல்லது தமிழ் நாடு தலைமை அமைச்சருக்குக் கடிதங்களை அனுப்பி இராஜதந்திர முறைகளை மீறவேண்டாமென்றும் அப்படி மீறினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அக்கடிதத்தில் வைத்தியர்கள் எச்சரிக்கப்பட்டார்கள்.

130. மே 16ஆம் திகதி வைத்தியர்கள் யுத்த வலயத்திலிருந்து வெளியேறியதும் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு பல மாதங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஜூலை ஆரம்பத்தில் வைத்தியர்கள் பத்திரிகையாளர் மாகாநாடொன்றை நடாத்தி யுத்தத்தில் உண்மையிலேயே சிலரே மரணித்ததாகவும் காயமடைந்ததாகவும் அதுபற்றி பொய்சொல்ல எல்.ரி.ரி.ஈ. தம்மை நிர்பந்தப்படுத்தினர் எனவும் அங்கு அவர்கள் கூறினர்.

இம்மறுப்புரை தாம் தொடர்ந்து வன்னியில் இருந்தபோது வழங்கிய நேர்காணல்கள் இலத்திரனியல் தபால் மற்றும் விடுத்த பகிரங்க அறிக்கைகளுடன் மாறுப்பட்டதாக இருந்தது. அரசாங்கம் அவர்களை அழுத்தத்திற்குள்ளாக்கியதாகவும் இம்மறுப்புரைகள் அவர்கள் முன்னர் வழங்கிய அறிக்கைகளின் உண்மையைப் பாதிக்காது எனவும் இக்குழு நம்புகிறது.

(49) பொதுமக்கள் எண்ணிக்கை மற்றும் அவர்கள் தேவை பற்றிய 1ஆம் நிலைத் தகவலைக் கைவசம் வைத்திருந்த போதிலும் இலங்கை அரசாங்கம் பொதுமக்கள் மீது மேலும் அழுத்தத்தை ஏற்படுத்துவதற்காக வன்னிக்கான பொருட்களின் விநியோகத்தைக் குறைப்பதற்கான வியூகத்தின் ஓர் அங்கமாக மிகவும் குறைவான எண்ணிக்கை பற்றிய மதிப்பீட்டையே பிரயோகித்தது. இதற்காக மதிப்பீடுகள் குறைக்கப்பட்டது என்பதை பின்னர் சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவர் ஒப்புக்கொண்டார். யுத்தத்தின் இறுதிக்கட்டங்களின்போது அரசாங்கம் பொதுமக்களை எல்.ரி.ரி.ஈ. உடன் இணைத்துக் காட்டியதையும் குறைவான எண்ணிக்கை குறிக்கிறது.

### உ. இறந்த பொதுமக்களின் எண்ணிக்கை

132. யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின்போது வன்னியில் இறந்த அல்லது காயமடைந்த பொதுமக்கள் பற்றிய உறுதியானதொரு கணிப்பு இல்லை. உண்மையானதொரு கணிப்பை மேற்கொள்வதை பல காரணிகள் சிரமமாக்கியுள்ளன.

(அ) யுத்தப்பிரதேசத்தில் இருந்த பொதுமக்கள் எண்ணிக்கை 3 இலட்சத்து 30 ஆயிரம் ஆக இருந்திக்கலாம் என்றபோதிலும் அந்த எண்ணிக்கை நிச்சயமற்றதாகும்,

(ஆ) பிரிக்கும் செயற்பாட்டில் வெளிப்படையற்ற தன்மை காரணமாக வன்னியிலிருந்து வெளியே வந்தவர்களின் சரியானதொரு கணிப்பு இல்லாமை,

(இ) இறுதிக் கட்டத்தின்போது கட்டாயமாக ஆட்சேர்த்தல் காரணமாக சிக்கலாகிய நிலைமையில் எல்.ரி.ரி.ஈ.இன் போராளிகள் எண்ணிக்கை பற்றிய நிச்சயமற்ற தன்மை மற்றும் பல பொதுமக்கள் விழுந்த இடத்திலேயே அவர்களது மரணம் பற்றிய எவ்வித அவதானிப்பும் பதிவும் இன்றி அவர்கள் புதைக்கப்பட்டனர்.

**தமிழாக்கம் தொடர் 17**

133.வைத்தியர்களால் சேகரிக்கப்பட்ட காயமடைந்த மற்றும் மரணமாகியவர்கள் பற்றிய, ஆஸ்பத்திரிகளால் மற்றும் மாவட்ட அனர்த முகாமைத்துவ அலகுகளினால் ஒதுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் சில மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(தொடரும்)

# ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்

## 16.05.2011 முதல் 01.12.2012 வரை




சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்.

**ஏழரைச் சனியின் ஆதிக்கம், இரண்டாம் சுற்றெனில் ஆனந்தம்!**

நம்பியவர்களுக்குக் கைகொடுத்துதவும் நல்ல உள்ளம் படைத்த துலாம் இராசி நேயர்களே!

உங்கள் இராசிநாதன் சுக்கிரன் ஐந்தாமிடத்தில் சஞ்சரித்து ஆண்டு தொடங்குகிறது. இதுவரை விரயச் சனியின் பிடியில் சிக்கியிருந்த நீங்கள் இனி இழப்புகளை ஈடுசெய்யும் விதத்திலும் இனிய வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் விதத்திலும் கர வருடம் பிறந்துள்ளது.

வருடப் பிறப்பன்று தொழில் ஸ்தானாதிபதி சந்திரன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரித்து, இராசிநாதனைப் பார்ப்பதால் ஆண்டு முழுவதும் வேண்டிய நற்பலன்கள் உங்களுக்குக் கிடைக்கப் போகிறது.

இருப்பினும் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாகக் கூட சில சமயங்களில் மாறலாம். வருடத் தொடக்கத்திலேயே சனியும் வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 4, 5இற்கு அதிபதியான சனிபகவான் வக்ர நிலையை அடையும்பொழுது மீண்டும் பழைய பிரச்சினைகள் தலைதூக்கலாம். அந்நியோன்னியமும் அனுசரிப்பும் குறையாமல் பார்த்துக்கொள்வது நல்லது.

பிள்ளைகள் வழியில் பிரச்சினைகளும் திடீர் விரயங்களும் ஏற்படாமல் இருக்க முன்கூட்டியே யோசித்து எதையும் செய்வது நல்லது. கல்வி வளர்ச்சியில் தடை, கட்டடப் பணியில் தொல்லை போன்றவற்றைச் சந்திக்காமலிருக்க சனிபகவான் வழிபாட்டில் முழுக்கவனமும் செலுத்துவது நல்லது.

குரு உங்கள் இராசிக்கு பகைவனாக இருந்தாலும்கூட சகாய ஸ்தானத்திற்கும் அதிபதியாக அவர் விளங்கி வருகிறார். எனவே, அவர் பார்வை பதியும் நேரங்களில் ஓரளவு நற்பலன்களும் உங்களுக்கு வந்துசேரும்.

அடுத்து வரும் இராகு - கேது பெயர்ச்சியில்தான் நீங்கள் கொஞ்சம் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்ட வேண்டிய நேரமாகும். அந்த நேரத்தில் முறையான சர்ப்ப சாந்திகளைச் செய்துகொண்டால் முன்னேற்றத்தில் வரும் தடைகள் உங்களை விட்டு அகலும். அஷ்டமத்தில் கேது அல்லவா சஞ்சரிக்கின்றார்?

ஆயுள் ஸ்தானம் என்றும் மாங்கல்ய ஸ்தானம் என்றும் வர்ணிக்கப்படும் எட்டாமிடத்தில் கேது சஞ்சரிக்கும்போது ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு செலுத்தினால்தான் அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். பொதுவாக விநாயகப் பெருமானின் வழிபாடு உங்கள் வேதனைகளை எல்லாம் தீர்க்கும்.

விரயச் சனி மாறிய பின்னால் ஜென்மச் சனியின் ஆதிக்கம், பின்னர் குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறும். குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறும்போது வீட்டில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகளும் மழலையின் ஓசை கேட்பதற்கான அறிகுறிகளும் தோன்றும்.

**தளராத மனதிற்குச் சொந்தக்காரர்!**

"துயரங்களைப் பொடியாக்கத் துவளாத மனதோடு செயற்படுபவர்கள் துலாம் இராசிக்காரர்கள்" என்று சொல்வார்கள். தோற்றத்தில் கவர்ச்சியைப் பெற்றும் பேச்சினில் இனிமையைச் சேர்த்தும் நீங்கள் செயற்படுவதால்தான் எதிரிகள் உங்களிடம் சரணடைகிறார்கள்.

புன்னகையைக் காட்டிலும் பொன்னகைக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உங்கள் இராசிநாதன் சுக்கிரன் "களத்திரகாரகன்" என்று வர்ணிக்கப்படுகிறார். குடும்ப ஸ்தானம் மற்றும் களத்திர ஸ்தானத்திற்கு அதிபதியாக செவ்வாய் விளங்குகிறார். எனவே, நீங்கள் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் போது செவ்வாய் மற்றும் சுக்கிரனின் ஆதிக்கம் உங்கள் ஜாதகத்திற்கு ஏற்றவிதத்தில் இருப்பவராக தேர்ந்தெடுத்தால்தான் இல்லறம் நல்லறமாக அமையும்.

**சப்தம குருவால் ஏற்படும் சந்தோஷங்கள்!**

கர வருடத் தொடக்கத்திலேயே 08.05.2011 அன்று குருப்பெயர்ச்சி நடைபெறப் போகின்றது. உங்கள் இராசிக்கு மூன்று, ஆறுக்கு அதிபதியான குருபகவான் இதுவரை ஆறாமிடத்திலேயே சஞ்சரித்து வந்தார். சனி ஏழாமிடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார்.

சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் இராசியை நேர் பார்வையாகப் பார்க்கிறார். பகை கிரகமாகவிருந்தாலும் பார்க்கும் பார்வையால் பலன் கொடுக்கும் கிரகம் குரு ஒன்றுதான். எனவே, எதிர்காலத்தை இனிமையாக்கப் போட்ட திட்டங்கள் நிறைவேறும். தன்னம்பிக்கை கூடும். தக்கவிதத்தில் உங்கள் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும்.

**"ஏழில் குரு வந்தால்,**
**எதிர்காலம் சிறப்படையும்!**
**வாழ்வில் வசந்தம் வரும்**
**வருமானம் பெருகிவிடும்!**
**சூழும் பகை விலகும்**
**சுற்றமெல்லாம் பாராட்டும்**
**கோள்கள் குறுக்கிட்டால்,**
**குரு பார்வை தவிர்த்துவிடும்!"**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கிறது.

அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது ஏழில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை 1, 3, 11 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே, உடல் நலம் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், படிப்படியாகக் கடன் சுமை குறையும், பல நாட்களாக தொழிலில் எதிர்பார்த்த இலாபம் வந்துசேரும், மேலதிக வருமானங்கள் பெருகும், இதைச் செய்வோமா? அதைச் செய்வோமா? என்ற சிந்தனை மேலோங்கும், கூட்டுத்தொழிலுக்கு நண்பர்கள் கைகொடுத்துதவுவதாகச் சொல்வர். ஆனால், ஏழரைச் சனி ஆதிக்கம் நடைபெறுவதால் விரயத்தின் விளிம்பிற்கே செல்லக்கூடிய வாய்ப்பு உருவாகலாம். எனவே, யோசித்து புதுமுயற்சியில் ஈடுபடுவது நல்லது.

**இராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் இராசிக்கு மூன்றாமிடத்தில் இராகுவும் ஒன்பதாமிடத்தில் கேதுவும் சஞ்சரித்து வந்தார்கள். மே மாதம் 16ஆம் திகதி இராகு-கேதுக்களின் மாற்றம் ஏற்படுகிறது. இரண்டில் இராகுவும் எட்டில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள்.

தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இராகு தனவரவைப் பெருக்குவார். எனவே, வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கி மகிழப்போகிறீர்கள். குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்புக் கிட்டும்.

அதேசமயம் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் கேது திடீர் திடீரென விரயங்களை உருவாக்குவார். சேமிப்பு ஒரு பக்கம் சேர்ந்து கொண்டே இருந்தாலும் மற்றொரு பக்கம் கரைந்து கொண்டே இருக்கும். தெய்வத் திருப்பணிகளுக்குச் செலவிடும் சூழ்நிலையும் உருவாகும். பாம்பு கிரகங்கள் பலன் கொடுக்கவும் தேம்பும் வாழ்க்கை மாறி தேசம் போற்றும் வாழ்வமையவும் யோகபலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளை முறைப்படி செய்வது நல்லது.

**சஞ்சலம் தீர்க்கும் சனிப்பெயர்ச்சி!**

இதுவரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் 21.12.2011 முதல் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். அங்கிருந்து இரண்டரை ஆண்டு காலம் தனது ஆட்சியைத் தொடருவார். அதன்பின்னர் இரண்டாமிடத்திற்கு வந்து அங்கும் இரண்டரை ஆண்டு காலம் தங்கியிருப்பார். இந்த ஏழரைச்சனிதான் எண்ணற்ற மாற்றங்களை உருவாக்கும் ஜென்மச்சனி என்பதால் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

பணிகளில் தொய்வு ஏற்படும், பலரையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகும், கனிவாகப் பேசியவர்கள் உரத்த குரலில் பேசுகிறார்களே என்று கவலைப்படுவீர்கள், கடிதம் மூலம் வந்த தகவல் மன அமைதியைக் குறைப்பதாக இருக்கும். எனவே, சனிக்கிழமை தோறும் விரதமிருந்து எள் தீபமேற்றி சனிபகவானை வழிபடுவது நல்லது.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலங்கள்!**

ஆண்டின் தொடக்கத்திலேயே சனி வக்ரம் பெறுகிறார். அதன்பின்னால் மீண்டும் இரண்டு முறை வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர காலத்தில் வாழ்க்கைப் பாதையில் திசை மாற்றம் ஏற்படலாம், தாய்வழி ஒத்துழைப்பு குறையலாம், பங்காளிப் பகை அதிகரிக்கலாம், உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஊர்மாற்றம், இலாகா மாற்றம் உருவாகலாம், பிள்ளைகளின் திருமணம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம். பூர்வீகச் சொத்துகளை யோசித்து விற்பது நல்லது.


31.08.2011 முதல் 15.12.2011 வரை குரு வக்ரம் பெறுகிறார். அக்காலத்தில் உங்களுக்கு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பலன்கள் நடைபெறும். எக்காலத்திலும் இல்லாத அளவிற்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். வரவு திருப்தி தரும். குரு ப்ரீதியும் சுக்கிர ப்ரீதியும் செய்வது நல்லது.

**பலன்தரும் பரிகாரம்!**

வெள்ளிக்கிழமை தோறும் தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபட்டு வாருங்கள். யோகபலம் பெற்ற நாளில் ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ளுங்கள்.

சிவல்புரி சிங்காரம்





உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ஈரான் சென்றுள்ள கைத்தொழில் வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஈரான் இஸ்லாமிய குடியரசின் வெளிவிவகார அமைச்சர் டாக்டர் அலி அக்பர் சலாஹியை சந்தித்து கலந்துரையாடுவதையும் ஈரானுக் கான தூதுவர் எம்.என். சுஹைர் அருகில் காணப்படுவதையும் ப்டங்களில் காணலாம்.

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 75 சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காக 200 மில்லியன் டொலர் செலவில் 75 சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தில் இடம்பெறும் 64 ஆவது உலக சுகாதார மாநாட்டில் அமைச்சர் நேற்று உரையாற்றும் போது இதனைத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தொடரில் 172 நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்களும் பிரதி நிதிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

அமைச்சர் மைத்திரிபால ஸ்ரீசேன இங்கு உரையாற்றுகையில்,

மஹிந்த சிந்தனை இதிரிரஸ்ம தொலை நோக்குத் திட்டத்தின் நோக்கம் நகர கிராமிய சமூகங்களுக்கு சமமான சுகாதார சேவைகளை வழங்குவதாகும். இலங்கை அரசாங்கத்தினால் தொற்று நோய்களை கட்டுப்படுத்துவதற்கென மேற்கொள்ளப்படும் தேசிய தடுப்பூசி ஏற்றும் திட்டம் சர்வதேச ரீதியாக பாராட்டப்பட்டுள்ளது.

தாய், சேய் ஆகியோருக்கு போசாக்கு மட்டத்தை மேம்படுத்துவதற்காக இலங்கை ஜனாதிபதியின் தலை மைத்துவத்திற்குக் கீழ் தேசிய போசாக்கு பேரவை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இங்கு தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# உலக உணவு ஸ்தாபனத்தின் விசேட தூதுக்குழு இலங்கை வருகை

(கொழும்பு)

உலக உணவு ஸ்தாபனத்தின் விசேட தூதுக்குழு இம்மாதம் இலங்கைவரவுள்ளது.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் உலக உணவு ஸ்தாபன நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றி அறிந்து கொள்வது இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

வடக்கில் 5 மாவட்டங்களில் மீள் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகளுக்கு உணவு வழங்கும் திட்டத்தை இந்த ஸ்தாபனம் கடந்த ஜனவரி மாதத்தில் ஆரம்பித்திருந்தது.

அண்மையில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தையும் இந்த ஸ்தாபனம் மேற்கொள்கின்றது.

இந்தத் திட்டங்கள் வடக்கு மற்றும் மத்திய கிழக்கு மாகாணங்களில் கடந்த பெப்ரவரி மாதம் தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இத்திட்டமானது மேலும் 5 மாதங்களுக்கு நீடிக்கப்படுமானால் இன்னும் கூடுதலான மக்கள் நன் மையடைவர் என்று உலக உணவு திட்டப் பணிப்பாளர் ஆர்.எச். ஏ.டபி ள்யூ குமாரசிங் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்

## ஐ.தே.க. பிரதித்தலைவர் தெரிவிப்பு



(கொழும்பு)

அச்சமும் பீதியும் இல்லாமல் ஒற்றுமையாக வாழக்கூடிய சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இராமன்ய மகா பீடத்தின் பஜா கால விகாரையில் நடைபெற்ற வழிபாட்டு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீண்டகாலமாக பயங்கரவாதத்தின் பிடியில் சிக்கிய மக்களுக்கு ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க அனைவரும் எதிர்பார்ப்பதாக கரு ஜெயசூரிய கூறியுள்ளார்.

நீதியும் நியாயமும் கிடைக்குமிடத்தில் மக்கள் அச்சமின்றி வாழ்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்குமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தகுதியுடையவருக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டுமென்று தெரிவித்த அவர் அந்நிலைமை ஏற்பட வேண்டுமென்பதை அனைவரும் விரும்புவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கிழக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

நாவிதன் வெளி பிரதேசத்தில் மாதர் அபிவிருத்தி நிலைய கட்டடம் ஒன்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனினால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தக்கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றிய முதலமைச்சர் கிழக்கு மாகாணத்தில் வருடாந்தம் சுமார் 20 ஆயிரம் இளைஞர், யுவதிகள் உயர் கல்வியைதொடரமுடியாத நிலையில் பெற்றோரில் தங்கி வாழ்வதாக கவலை வெளியிட்டுள்ளார்.

இவர்கள் வேலைவாய்ப்புக்களை பெறுவதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனை இலக்காக கொண்டே கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களம் வேலைவாய்ப்புக்களுடன் கூடிய தொழிற்பயிற்சி நெறிகளை பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் மேற்கொண்டு வருகின்றன.

இதனூடாக எதிர்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் தொழில் வாய்பற்று இருக்கின்ற இளைஞர், யுவதிகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

குறித்த கட்டடத்தின் நிர்மாணப் பணிக்காக முதலமைச்சரின் விசேட நிதி ஒதுக்கீட்டில் இருந்து 10 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக முதலமைச்சரின் ஊடக செயலாளர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




- ★ 1565- ஒட்டோமான் படைகள் மால்ட்டாவை அடைந்தன. மால்ட்டாவின் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியது.
- ★ 1652- வட அமெரிக்காவிலேயே முதன் முதலில் அடிமைத் தொழிலை இல்லாதொழிக்கும் சட்டத்தை ரோட்தீவு கொணர்ந்தது.
- ★ 1765- கனடாவின் மொன்ட்றியால் நகரத்தின் பெரும்பகுதி தீயினால் அழிந்தது.
- ★ 1803- ஐக்கிய இராச்சியம் பிரான்ஸ் மீது போரை அறிவித்தது.
- ★ 1804- முதலாம் நெப்போலியனை பிரெஞ்சு மன்னனாக செனட் தெரிவு செய்தது.
- ★ 1869- ஏசோ குடியரசு கலைக்கப்பட்டு ஜப்பானுடன் இணைக்கப்பட்டது.
- ★ 1896- கோடின்கா துயரம்: ரஷ்ய மன்னன் இரண்டாம் நிக்கலாசின் முடிசூடும் நிகழ்வுக் கொண்டாட்டத்தின் போது ''கோடின்கா'' என்ற இடத்தில் இடம்பெற்ற நெரிசலில் சிக்கி ஆயிரத்து 389 பேர் உயிரிழந்தனர்.
- ★ 1897- ஐரிய எழுத்தாளர் பிராம் ஸ்டோக்கர் எழுதிய டிராக்குலா புதினம் வெளியிடப்பட்டது.
- ★ 1900- தொங்கா ஐக்கிய இராச்சியத்தின் பகுதியாக்கப்பட்டது.
- ★ 1910- ஹேலியின் வால்வெள்ளியின் வாலினூடாக பூமி சென்றது.
- ★ 1927- மிச்சிகனில் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு நிகழ்வில் பெரும்பாலும் குழந்தைகள் அடங்கிய 45 பேர் கொல்லப்பட்டனர்.
- ★ 1944- கிரிமிய தார்த்தார்கள் சோவியத் அரசினால் வெளியேற்றப்பட்டனர்.
- ★ 1956- உலகின் 4 ஆவது பெரிய மலையான லகோத்ஸே மலையின் உச்சியை முதன் முதலில் சுவிட்சர்லாந்து மலையேறிகள் எட்டினர்.
- ★ 1969- அப்பல்லோ 10 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ★ 1974- சிரிக்கும் புத்தர் என்ற பெயரிடப்பட்ட திட்டத்தில் இந்தியா தனது முதலாவது அணுகுண்டை வெற்றிகரமாக சோதித்து.
- ★ 1980- வோஷிங்டனில் சென் ஹெலன்ஸ் மலை தீக்கக்கியதில் 57 பேர் கொல்லப்பட்டனர். 3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சேதம் ஏற்பட்டது.
- ★ 1990- பிரான்சில் TGV தொடரூந்து உலகின் அதி உயர் வேகத்தில் (515.3 கிமீ/மணி) சென்றது.
- ★ 1991- ஹெலன் ஷார்மன் விண்வெளிக்குச் சென்ற முதலாவது பிரித்தானியர் என்ற பெருமையை பெற்றார்.
- ★ 1991- வடக்கு சோமாலியா சோமாலிலாந்து என்ற பெயரில் மீதமான சோமாலியாவில் இருந்து விடுதலையை அறிவித்தது. ஆனாலும் அனைத்துலகம் இதனை அங்கீகரிக்கவில்லை.
- ★ 2006- நேபாளம் மதசார்பற்ற நாடாகவும் அதன் மன்னர் ஒரு சம்பிரதாய மன்னராகவே இருப்பாரெனவும் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேறியது.

**பிறப்புக்கள்**

- ★ 1048- ஒமர் கையாம்,பார்சியக் கவிஞர் கணிதவியலாளர் (இ.1131)
- ★ 1908- இயான் பிளெமிங், ஆங்கில எழுத்தாளர் (இ.1964)
- ★ 1920- பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் 11 (இ.2005)
- ★ 1913- நீலம் சஞ்சீவ் ரெட்டி, இந்தியாவின் 5 ஆவது ஜனாதிபதி (இ.1996)
- ★ 1933- தேவகௌடா, இந்தியாவின் 11 ஆவது பிரதமர்
- ★ 1939- பீற்றர் குருன்பெர்க், ஜேர்மனிய இயற்பியலாளர்

**சிறப்பு நாள்**

- ★ அனைத்துலக அருங்காட்சியக நாள்.

# புராதன தொழில் நுட்பம்



## ஆன்மீகம் 20

கேள்வி: தியானலிங்கக் கோயிலைப்பற்றி எங்களுக்குச் சொல்ல முடியுமா?

சத்குரு: முதலில் லிங்கம் என்றால் என்ன? லிங்கம் என்ற சொல்லின் பொருள் வடிவம் என்பதாகும். இன்றைய நவீன விஞ்ஞானம் முழு பிரபஞ்சமும் சக்திதான் என்று சொல்கிறது. நவீன விஞ்ஞானம் சந்தேகத்திற்கு இடமில்லாமல் என்ன சொல்லியிருக்கிறது என்றால் முழு பிரபஞ்சத்சமும் ஒரே சக்தியின் பல்வேறு விதமான வெளிப்பாடுகள்தான் என்று சொல்கிறது. நீங்கள் எந்த மதத்தை சார்ந்தவராக இருந்தாலும் சரி கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார் என்று தான் அதுவலியுறுத்தி வந்திருக்கிறது. கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார் என்று சொன்னாலும் சரி அல்லது எல்லாம் ஒரே சக்திதான் என்று சொன்னாலும் சரி இரண்டுமே வெவ்வேறானவை அல்ல. ஒன்றே தான் இல்லையா? ஐன்ஸ்டீன் $E=MC^2$ என்று சொல்கிறார்கள். முழு பிரபஞ்சமும் ஒரே சக்திதான் என்று அவர் சொல்கிறார். அதை அவர் "E" என்று சொல்கிறார். நாம் அதை ஈஸ்வரா என்று சொல்கிறோம்.

எனவே வெளிப்படுத்தப்படாத ஒரு சக்திநிலை வெளிப்பாடு காணத் தொடங்கும் போது அதன் முதல் வடிவம் எப்போதுமே லிங்கவடிவில் தான் இருக்கிறது. ஒரு நீள்வட்ட வடிவம் என்று இதைக் குறிப்பிடலாம். லிங்கம் என்றால் ஒரு நேர்த்தியான நீள்வட்டவடிவம் என்று பொருள். யோக அறிவியலில் நமக்கு எப்போதுமே தெரியும் முதல் வடிவமும் லிங்க வடிவம்தான், தியானத்தன்மையை உங்களுக்குள் ஒரு குறிப்பிட்ட சக்திநிலைக்கு நீங்கள் எடுத்து வந்தால் கரைந்து போகக்கூடிய நிலைக்குவந்து விட்டால் அந்த இறுதி வடிவம் எப்பபோதுமே லிங்க வடிவில்தான் அமைகிறது. படைப்பின் முதலும் முடிவுமான வடிவம் இலிங்கம். இன்று ஆராய்ச்சியாளர்கள் வான்மண்டலத்தில் இருக்கும் பல கோலங்களை படமாகப்பிடித்திருக்கிறார்கள். கோலங்கள் ஒவ்வொன்றும் நீள்வட்ட வடிவத்தில் தான் இருக்கிறது. ஏனென்றால் முதல் வடிவம் எப்போதுமே நீள்வட்ட வடிவத்தில்தான் இருக்கிறது. இறுதி வடிவமும் கூட அப்படித்தான்.எனவே லிங்கம் என்பதன் பொருள் அதுதான்.

உதாரணமாகஇந்தக்காகிதத்தாள் இருக்கிறது. இந்தக்காகிதத்தாளை உங்கள் கைகளில் சிறிதுநேரம் வைத்திருந்து விட்டு அதை என்னிடம் கொடுங்கள். நான் அதை ஒரு பத்து, இருபது நொடிகள் வைத்திருந்துவிட்டு திருப்பி உங்களிடம் தருகிறேன். அதை நீங்கள் உங்கள் கைகளில் வைத்திருந்தால் உங்களால் வித்தியாசத்தை உணர முடியும். அது முற்றிலும் வேறு விதமாக இருக்கிறது. ஏனென்றால் இந்த காகிதத்தாளை ஒரு குறிப்பிட்ட விதமாக சக்தியூட்ட முடியும். அதை நீங்களும் உணர முடியும். ஆனால் அது ஒரு சில நிமிடங்கள் மட்டும் தான் இருக்கும். மீண்டும் ஒரு சாதாரண காகிதத்தாளாக ஆகிவிடுகிறது. நீங்கள் எந்தப்பொருளை வேண்டுமானாலும் சக்தியூட்ட முடியும். ஆனால் சிறிது நேரத்தில் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பி விடுகிறது.

ஆனால் லிங்கவடிவம் என்பது ஒரு சரியான பொருளில், சரியான புரிதலுடன் அதை சக்தியூட்டம் செய்தால் அந்த சக்தி காலத்திற்கும் நிலைத்திருக்கும். மக்கள் தங்களுடைய நல வாழ்விற்காக பல்வேறு விதங்களில் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். தியானலிங்கம் மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்தது. ஏனென்றால் வாழ்வின் ஏழு அடிப்படை அம்சங்களும் அதில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது ஒரு உயிருள்ள மனிதரைப் போல. ஆனால் உடல்தன்மை மட்டுமே அங்கே இல்லை. தியானலிங்கம் கோயில் 100% நிசப்தத்தில் இருக்கக்கூடியது. அங்கே எந்தச் சடங்குகளும் இல்லை. எந்த வழிபாடுகளும் இல்லை. எந்த நம்பிக்கைகளும் அங்கே இல்லை. அங்கே சிறிது நேரம் அமைதியாக நீங்கள் கண்மூடி அமர்ந்திருந்தால் தியானம் என்பதை எந்த ஒரு குறிப்பும் இல்லாமல் நீங்கள் உணர முடியும். உங்கள் தன்மை இயல்பாகவே தியானத்தன்மை அடைகிறது. இது மிகவும் சக்தி வாய்ந்த இடம். உங்கள் முதுகுத் தண்டை அசைத்துப்பார்க்கக்கூடிய அளவிற்கு சக்திவாய்ந்த தன்மை அங்கே இருக்கிறது.

கட்டக்கலை ரீதியாகவும் அது மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்த இடமாக இருக்கிறது. உலகில் பல பகுதிகளில் இருந்தும் பல மதங்களைச் சார்ந்த மக்களும் இங்கே வருகிறார்கள். ஏனென்றால் இது முற்றிலும் தியானத்தன்மைக்காக உருவாக்கப்பட்ட இடம். நீங்கள் யாராக இருந்தாலும் என்னவாக இருந்தாலும் ஆன்மீக வளர்ச்சிக்கான விதை உங்களுக்குள் விதைக்கப்படுகிறது. தியானலிங்க வளாகத்தில் இருக்கும்போது எந்த ஒரு வாய்மொழிரீதியான குறிப்புகளும் இல்லாமல் ஆன்மீக வளர்ச்சிக்கான ஆன்மவிதை உங்களுக்குள் விதைக்கப்படுகிறது.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

(தொடரும்)

# திருகோணமலை கலை, இலக்கியமும் தேசியப்பார்வையும்

## 01

இலங்கையின் கிழக்குக்கரையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வனப்புடன்கூடிய நகரம் திகோணமலை நகரமாகும். மிகநீண்ட வரலாற்றையும், வெளிநாட்டவர்கள் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாகவும் வடக்குக்கிழக்கு மக்களின் தலைநகரமாகவும் திருகோணமலை விளங்குகிறது.

கிழக்குமக்களின் வாழ்க்கைக் கோலங்களையும் வடக்கு மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் இணைத்து நிற்கும் பாலமாக விளங்கிவரும் திருகோணமலைப் பிரதேசம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக, அதன் பூகோள அமைப்புக்கள் கலாச்சாரங்கள் மக்களின் வாழ்வுமுறைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்தப்பிரதேசத்தின் முக்கிய அடையாளங்களாக சுட்டிக்காட்டப்படும் கோணேசர்கோயில், இயற்கைத்துறைமுகம், கன்னியா வெந்நீரூற்று, கந்தளாய்க்குளம், வெருகலம்பதி,தம்பலகாமம், போன்ற இன்னோரன்ன புகழ்ச் சின்னங்களிலிருந்து உருவாகியதே இப்பிரதேசத்தின் தொன்மை மிகுந்த இலக்கியங்களும், கலைகளும், மரபுகளும் வரலாறுகளுமாகும். புராதன காலத்திலிருந்து பேசப்படும் கோணேசர் ஆலய தொன்மங்களிலிருந்து இப்பிரதேசத்தின் கலை, இலக்கியம் முகிழ்விடத் தொடங்கியதை இறைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுந்ததாகக் கருதப்படும் புராணங்களும், இதிகாசங்களும், கல்வெட்டுக்களும் சான்று பகிருகின்றன.

திருகோணமலைப்பிரதேசத்தின் கலை இலக்கியங்களில் ஆரம்பம் கோணேசர் மரபைப்பின்பற்றி எழுந்து வளர்ந்துள்ளமையை கோணேசர் கல்வெட்டு, திருகோணமலைப் புராணம் போன்ற புராணங்கள்மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"**

சிங்கை செகராஜசேகர மன்னன் காலத்தில் வாழ்ந்ததாக கருதப்படும் பண்டிதர் எனும் புலவரால் இயற்றப்பெற்ற கோணேசர்புராணம் கவியரசர் என்னும் புலவரால் இயற்றப்பெற்ற கோணேசர் கல்வெட்டு ஆகிய மரபுவழி இலக்கியங்கள் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பது பல ஆய்வாளர்களின் ஆய்வுகளிலிருந்து நிரூபணமாகிறது. இதனைத் தொடர்ந்து 18 ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகக் கருதப்படும் சித்திர வேலாயுதர்காதல், கோணமலை அந்தாதி, என்பன முன்னைய காலப் புராணங்களின் தொடர் நிலைப்பாடுகளின் பிறப்புக்களாக, திருமலையின் கோவில் வரலாறு சார்ந்த முறைகளையும் சம்பவங்களையும் மரபுகளையும் சொல்பவையாகக் காணப்படுகின்றன. புராண இலக்கியங்கள் தோன்றிய 17ஆம், 18ஆம் நூற்றாண்டை தொடர்ந்து மறுமலர்ச்சி நூற்றாண்டென கூறப்படும் 19ஆம் நூற்றாண்டின் மாற்றங்கள், வளர்ச்சிகள் போக்குகள் இலங்கையின் ஏனைய பகுதிகளை அதிர வைத்ததைவிட திருகோணமலையின் சமூக விழுமியங்களிலும் கலை, இலக்கியங்களிலும் உடனடிமாற்றங்களைக் கொண்டு வந்துள்ளன. எந்தவை இப்பிரதேசத்தின் வரலாற்று ஆதாரங்கள் மூலமும் அறியக்கூடியதாகவுள்ளது.

19ஆம் நூற்றாண்டின் நவீன வரவுகள் எனப்படும் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், மெல்லிசை என்னும் நவீன வடிவங்கள் தமிழகத்தில் கால் ஊன்றத் தொடங்கிய அதே காலப்பகுதியில் இவ்வடிவங்கள் திருகோணமலையிலும் வளரத்தொடங்கியது. ஈழத்தின் ஆரம்ப நாவல்களான ஊசோன் பாலந்தை (1891), மோகனாங்கி (1895) ஆகிய இரண்டு நாவல்களும் திருகோணமலையைச் சேர்ந்த எஸ். இன்னாசித்தம்பி, பண்டிதர் சரவணமுத்துப்பிள்ளை ஆகியோரால் நாவல் இலக்கியம் எனும்வடிவம் தமிழில் தோன்றிய காலத்திலேயே உருவாக்கப் பெற்றது.

தமிழின் ஆரம்ப நாவல்களான பிரதாப முதலியார்சரித்திரம் (1874),கமலாம்பாள் சரித்திரம் (1896) ஆகிய நாவல்கள் எழுந்த அதே காலப்பகுதியில் இவ்விரு நாவல்களும் திருகோணமலை அறிஞர்களால் எழுதப்பட்டிருப்பதுதான் மேலே சொன்ன கூற்றுக்கு ஆதாரமாக உள்ளது.

**திருமலை நவம்**

(தொடரும்)

# பரிகாரம் எளிமையாக இருந்தாலும் பலன் உண்டு

ஒவ்வொருவருக்கும் உண்டா கும் பிரச்சினைகளுக்கு ஏற்ப வெவ்வேறு விதமாக பரிகாரங்கள் சொல்லப்பட்டு வந்தாலும் பொதுப் பரிகாரமாக ஒவ்வொரு திசைக்கும் அந்த திசைக்கும் இடையே வரும் புத்திகளுக்கு ஏற்பவும் பரிகாரம் சொல்லப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு ஜோதிட ஆசிரியரின் விருப்பங்களுக்கு ஏற்ப சிறிய மாற்றங்கள் தென்படுகின்றன.

முடிந்தவரை பரிகாரங்களை எளிமையாக செய்வது நல்லது. கடன்பட்டோ, நஷ்டப்பட்டோ பரிகாரங்கள் செய்வதை விட

## ஜோதிடக் களம்

சிரமம் இல்லாமல் உணர்வு பூர்வமான பக்தியுடன் பரிகாரம் செய்தால் பலன் நிச்சயம்.

பசு தானம் செய்ய இயலாதவர்கள், பசுவிற்கு உணவு கொடுக்கலாம். இதுபோன்று எளிய முறையில் பரிகாரங்களைச் செய்தால் கடன் தொல்லை, நோய், மனவருத்தம், கணவன்-மனைவி இடையே சண்டை சச்சரவு, திருமணம் தள்ளிப் போதல், இராகு-கேது தோஷத்தால் வரும் கெடுதல்கள், செவ்வாய் தோஷம், புத்திர தோஷம், செய்வினை, பைசாச பயம், மரண பயம் போன்ற கெடுதல்கள் விலகிவிடும். பொதுவாக அந்தந்த திசையில் செய்யக் கூடிய பரிகாரங்கள் உடனடியாக நல்ல முறையில் நமக்குப் பலன்தரும். மனசந்தோஷமும் உண்டாகும்.

### சூரிய திசை சாந்தி பரிகாரம்

சூரிய பகவான் திசையில் சூரிய புத்தியில் சிவபெருமானுக்கு ருத்ரம் சொல்லி அபிஷேகம் சொல்லி பூஜிப்பது சூரிய புத்தியில் ஏற்படும் தோஷத்தை போக்கும்.

சந்திர புத்தியில் துர்க்கா தேவியை பூஜித்து வர மனக்கலக்கம் விலகும்.

செவ்வாய் புத்தியில் முருகப் பெருமானை பூஜித்து வர சத்ரு பயம் விலகும்.

இராகு புத்தியில் துர்க்கையின் நாமத்தை ஜெபிக்க செய்வினை நீங்கும்.

குரு புத்தியில் தட்சிணாமூர்த்தியை தியானிக்க யசூர் வேதப் பாராயணம் செய்ய மனசாந்தி உண்டாகும்.

சனி புத்தியில் சிவன் அல்லது ஆஞ்சநேயசுவாமியை பூஜிக்க விரோதிகள் விலகுவார்கள்.

புதன் புத்தியில் மகா விஷ்ணுவை பூஜித்தாலோ, விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்தாலோ நண்பர்களால் உதவி கிட்டும்.

கேது புத்தியில் சூரிய பகவானை நோக்கி சூரிய நமஸ்காரம் தொடர்ந்து செய்து வர மனோதிடம் கூடும்.

சுக்ர புத்தியில் மகாலட்சுமியின் மந்திரத்தை குரு முகமாக அறிந்து ஜெபம் செய்து வர பணவரவு உண்டாகும்.


### சந்திர திசையில் சாந்தி பரிகாரம்

சந்திர திசையில் சந்திர புத்தியில் துர்க்கா ஸூக்தம் பாராயணம் செய்வதும் வசதி இருந்தால் எருமையை தானம் செய்வதும் வசதி இல்லாவிட்டால் எருமைக்கு தானம் செய்வதும் , வசதி இல்லாவிட்டால் எருமைக்கு எள்ளு பிண்ணாக்கு கொடுப்பதும் மனதில் ஏற்படும் கலக்கத்தை விலக்கும்.

சந்திர திசை, செவ்வாய் புத்தியில் முருகப் பெருமானை பூஜிப்பதும் சூரிய நமஸ்காரம் செய்வதும் உயர்ந்த பதவியைத்தரும்.

இராகு புத்தியில் சிவ பூஜை செய்து ம்ருத்யுஞ்ஜய ஜெபம் செய்வது பைசாச பயத்தை விலக்கி நன்மையை உண்டு பண்ணும்.

குரு புத்தியில் சிவ பூஜை தொடர்ந்து செய்து வர பெரியோர்களின் ஆசி உண்டாகும். அந்நிய தேச பயணம் கிடைக்கும்.




சனி புத்தியில் மகிஷ தானம் செய்ய மரண பயம் விலகும்.

புதன் புத்தியில் ஸ்ரீஸூக்த பாராயணம் செய்துவர மகாலட்சுமியின் அருள் உண்டாகும்.

கேது புத்தியில் வறியவர்களுக்கு ஆடு தானம் செய்ய விஷத்தால் ஏற்படும் பயம் விலகும்.

சுக்ர புத்தியில் இலட்சுமி பூஜை, குத்துவிளக்கு பூஜை செய்து வர கடன் விலகும்.

சூரிய புத்தியில் நல்ல பசுவை தானம் செய்ய பயங்கள் விலகி நீதிமன்ற வழக்குகள் சாதகமாகும்.

(தொடரும்)

# இந்திய மீனவர் விவகாரத்தில் இலங்கை வரம்பு மீறிச் செயற்படக்கூடாது

## இந்தியா அறிவிப்பு

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர் பிரச்சினைகளின் போது இலங்கை அரசாங்கம் வரம்பு மீறிச் செயற்படக்கூடாது என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இந்திய மீனவர்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமான விடயமாகும் எனவும் அத்துமீறல்களில் ஈடுபடும்போது அதிகார அழுத்தங்களை இந்திய மீனவர்கள் மீது இலங்கை பிரயோகிக்கக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு விளக்கமளித்துள்ளார்.

எனினும் ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கை தொடர்பான இந்திய அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இது வரையில் வெளியிடப்படவில்லை. (ஸ்ரீ-2)

# உலகில் புவியீர்ப்பு விசை குறைந்த நாடாக இலங்கை

(கொழும்பு)

உலகில் புவியீர்ப்பு விசை மிகவும் குறைந்த நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புவியியலாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது.

குறிப்பாக தென் மாகாணம் மற்றும் அதன் கரையோரப் பகுதியில் மிகவும் குறைந்தளவு புவியீர்ப்பு விசை காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சில நாடுகளைச் சேர்ந்த புவியியல் ஆய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

என்ன காரணத்தினால் இவ்வாறு ஈர்ப்பு விசையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

புவியீர்ப்பு விசை ஒரே அளவானது என்றே அண்மைக்காலம் வரையில் கருதப்பட்டு வந்தது.

நிலத்தின் கீழ் காணப்படும் பாறைகளின் அடைப்படையில் புவியீர்ப்பு விசையில் மாற்றம் காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வுகள் நடத்தப்பட உள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# அரச ஊழியர்களை சில் அனுட்டானம் செய்யப்பணிப்பது உரிமை மீறிய செயல்

## ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அனைத்து இனங்கள் மற்றும் மதங்களினதும் சம உரிமையை உறுதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை ஆசிரியர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் தேவையற்ற வகையில் பொதுத்துறை சேவையில் தலையீடு செய்யக்கூடாது என அவர் வலியிறுத்தியுள்ளார். சப்ரகமுவ மாகாண ஆளுநர் டபிள்யூ ஜே. எம். லொக்குபண்டாரவினால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்திற்கு எதிர்ப்பை வெளியிடும் நோக்கில் ஜோசப் ஸ்டாலின் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாணத்தில் கடமையாற்றி வரும் சகல அரச ஊழியர்களும் கட்டாயம் சில் அனுட்டாணம் செய்ய வேண்டுமென ஆளுநர் லொக்கு பண்டார வலியுறுத்தியுள்ளார்.

சில் அனுட்டானம் செய்வோரின் பெயர் விபரங்கள் பதியப்படும் எனவும் உத்தரவினை மீறுவோருக்கு சம்பள உயர்வு மற்றும் இடமாற்றங்கள் வழங்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுத்துறை ஊழியர்களின் சம்பள உயர்வு மற்றும் இடமாற்றங்களில் ஆளுநரினால் அழுத்தங்களை பிரயோகிக்க முடியுமாயின் வர்த்தமானி மற்றும் ஏனைய சட்ட நியதிகளில் அர்த்தமில்லை என ஜோசப் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

கட்டாயமாக சில் அனுட்டானம் செய்ய வேண்டும் என்ற உத்தரவு பௌத்தர்கள் அல்லாத அரசாங்க ஊழியர்களின் உரிமைகளை மீறும் வகையில் அமையப் பெற்றுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒவ்வொரு தனிப்பட்ட நபரினதும் சம மற்றும் இன உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத விவகாரங்கள் தனிப்பட்டவை எனவும் மத விவகாரங்களில் எவரும் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நூலகத்தின் நூல் சேகரிப்புக்கு உதவுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

உலக புத்தகதினம்,நூலகவார நிகழ்வுகள் அண்மையில் கோண்டாவில் பொது நூலகத்தில் இடம்பெற்றது.


இந்நிகழ்வின் போது அமரர் சபாபதி சங்கரப்பிள்ளையின் நினைவாக செல்வராசா குடும்பத்தினரும் நூலகவாரத்திலே எழுத்தாளர்கள் க.குணராசா (செங்கைஆழியான்) அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையும் ஒரு தொகுதி நூல்களை கோண்டாவில் பொது நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

ஏனவே இந்நூலத்திற்கு எழுத்தாளர்கள், நிறுவனங்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் நூல்களை அன்பளிப்பாக வழங்கி நூலகத்தின் நூல் சேகரிப்பிற்கு உதவுமாறு நூலகர் கி.அனிதா கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

19) மகனின் வயதைப்போல் நான்கு மடங்கு தாயின் வயதாகும். மகனதும் தாயினதும் வயதுகளின கூட்டுத்தொகை 5 ஆகும். தாயினது வயது எத்தனை?
1) 34 2) 44 3) 54


20) கமலிற்கு, கமலி, அமலி என இரண்டு பேத்திகள் உள்ளனர். கமலியின் அப்பா அமல் ஆவர். அமலின் சகோதரன் விமல் ஆவான், விமலிற்கு கமல் என்ன உறவு?
1) சித்தப்பா 2) மாமா 3) அப்பா

21) கீழே காட்டப்பட்டுள்ள குறியீடு ஏதோ ஒரு சொல்லை குறித்து நிற்கின்றது.




குறியீடு குறித்து நிற்கும் சொல் யாது?
1) கம்பஹா 2) விகடகவி 3) கதிரகம




22) மாகாணம், மாவட்டம், வலயம் ஆகியவற்றை படம் குறித்துக் காட்டுகின்றது. இதில் மாவட்டம் எவ் எழுத்தினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது?




1) A
2) B
3) C

23) பின்வரும் மாதிரி உருவை மடித்து அமைக்கத்தக்க கனவுரு எது?



1)  2)  3) 

24) ஒருவர் ஒளிப்படம் ஒன்றைப் பார்த்து பின்வருமாறு கூறினார். "எனக்கு சகோதரர்களோ சகோதரிகளோ இல்லை. எனினும், இவரது தந்தை எனது தந்தையின் மகனாவார்." அவ்வாறெனின் ஒளிப்படத்தில் காணப்படுபவருக்கு அவர் என்ன உறவு முறையிலுள்ளார்?
1) மகன் 2) தந்தை 3) பேரன்


**ராஜா, பாலா, சிவா, வரதன் ஆகியோர் இல்ல மெய்வல்லுநர் போட்டிக்காக 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்குபற்றினர். அவர்கள் ஓடிமுடித்த நேரம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு 25ம் வினாவிற்கு விடை தருக.**

***ராஜா - 15 செக்கன்கள்***
***பாலா - 13 செக்கன்கள்***
***சிவா - 10 செக்கன்கள்***
***வரதன் - 12 செக்கன்கள்***


25) இவர்களில் 1ம், 2ம், 3ம், 4ம் இடங்களைப் பெற்றவர்கள் முறையே,
1) ராஜா, பாலா, வரதன், சிவா
2) சிவா, வரதன், ராஜா, பாலா
3) சிவா, வரதன், பாலா, ராஜா

26) ஒரு குறித்த எண்ணை ஆறால் பெருக்கி இரண்டால் வகுத்து வரும் விடையிலிருந்து மூன்றைக் கழித்தால் 18ஐ விடையாகப் பெறலாம். எனின் அந்த குறித்த எண் யாது?
1) 5 2) 7 3) 9

27) FACE என்ற சொல்லை மட்டை ஒன்றில் எழுதி முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்த்தபொழுது அது தோன்றும் விதத்தை கீழே உள்ள விடைகளில் தெரிந்து கோடிடுக.
1) ƎƆAꟻ 2) ƎCAF 3) EƆAꟻ


28) 

தரப்பட்ட உருவை மேலிருந்து பார்க்கும் போது தோன்றும் சரியான விதத்தைக் காட்டும் படத்தின் கீழ் கோடிடுக.



1) 2) 3)


29) தரப்பட்ட எண்சட்டம் அமைந்துள்ள ஒழுங்கை அவதானித்து அடுத்துவரும் எண் சட்டத்தை வரைக.




30) $36cm^2$ பரப்பளவைக் கொண்ட சதுரவடிவக் காணித் துண்டு ஒன்றைச் சுற்றி 1m நீளத்திற்கு ஒரு கம்பம் வீதம் நாட்டப்பட்டது எனின் காணியைச் சுற்றி நாட்டப்பட்ட கம்பங்கள் எத்தனை?


........................................................................

**ஒரு சிறிய சதுரத்தின் பரப்பளவு $1cm^2$ ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டு 31ம் வினாவிற்கு விடை தருக.**



31) நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவு யாது?

........................................................................

32) 


பொருளின் நீளம் யாது?

........................................

33) ராஜாவின் அப்பா தொழில் நிமித்தம் நான்கு வருடங்களிற்கு ஒருமுறை வெளிநாடு சென்று வருவது வழக்கம். இந்த வருடம் (2011ம் ஆண்டு) ராஜாவின் அப்பா 8வது தடவையாக வெளிநாடு சென்றார் எனின் அவர் மூன்றாவது தடவை வெளிநாடு சென்றது எந்த ஆண்டிலாகும்?

........................................................................

**250km நேரான நீளமுள்ள நெடுஞ்சாலை ஒன்றில் படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு A முனையிலிருந்து ஒரு மோட்டார்காரும் B முனையில் இருந்து இன்னொரு மோட்டார்காரும் அம்புக்குறி காட்டிய வழியில் மணிக்கு 50km மாறாத வேகத்தில் பயணத்தை மேற்கொண்டது. இத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டு 34ம், 35ம் வினாக்களுக்கு விடை தருக.**




34) இரண்டு மோட்டார்கார்களும் எத்தனை மணித்தியாலத்தின் பின்னர் ஒரே இடத்தில் சந்திக்கும்.

........................................................................

35) Aயில் இருக்கும் மோட்டார்கார் B என்ற இடத்திற்குச் செல்ல எத்தனை மணித்தியாலம் எடுக்கும்?

........................................................................

36) இல்மனைட் மணலை ஏற்றிய நிலையில் லொறியின் எடை 7600kg 800g. வெறறு லொறியின் எடை 3200kg 400g எனின், இல்மனைட் மணலின் நிறை எவ்வளவு?

........................................................................


**37ம், 38ம் வினாக்களிற்கு பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுக.**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 25 | - | 13 | - | 7 | | 5 |
| + | | + | | + | | * |
| 30 | - | (A) | - | 3 | | 13 |
| + | | + | | + | | * |
| 13 | - | 3 | - | 8 | | 2 |
| 68 | | 30 | | 18 | | (B) |

37) A யின் பெறுமானம் யாது? ........................................

38) B யின் பெறுமானம் யாது? ........................................

**தரப்பட்ட உருவை அவதானித்து 39ம், 40ம் வினாக்களுக்கு விடை தருக. (சிறிய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 1m ஆகும்)**




39) A என்ற இடத்தில் இருக்கும் ஒருவர் B என்ற இடத்திற்கு அம்புக்குறி ஒன்று காட்டிய திசையில் செல்வதற்கு எத்தனை தடவைகள் இடப்பக்கம் திரும்பினார்?

........................................................................

40) பாலா A யிலிருந்து அம்புக்குறி ஒன்றின் வழியாகப் புறப்பட்டு B யை அடைந்தான். விமல் A யிலிருந்து அம்புக்குறி இரண்டின் வழியாகப் புறப்பட்டு Bயை அடைந்தான் எனின், அதிக தூரம் பிரயாணம் செய்த நபர் யார்?

........................................................................

(பகுதி II வெள்ளிக்கிழமை வெளிவரும்)

# வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தின போட்டியில் முதலிடம் பெற்றோர்

(அல்வாய்)

வடமராட்சி வலயமட்ட தமிழ்த்தினப் போட்டியில் முதலிடம் பெற்ற போட்டியாளர்களின் விபரம் வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியாளர்கள் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு,

**வாசிப்பு பிரிவு -1**
வி.சஞ்சித்(யா/நெல்லியடி ம.ம.வி)

**பிரிவு-2**
ந.துவாரகா (யா/வட இந்து மகளிர் கல்லூரி)

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

**கதைகூறல் பிரிவு-1**
ர.அபிராம்( யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி.)

**பேச்சு பிரிவு -1**
ம.அபிணயா(யா/நெல்லியடி மெ.மி. த.க.பா)

**பிரிவு -2**
சி.வைஸ்ணவி(யா/மெதடிஸ் பெ.உ.பா)

**பிரிவு -3**
ச.சங்கீர்த்தனா (யா/வட மத்திய .கல்லூரி)

**பிரிவு -4**
த.கோகுலன் (யா/ஹாட்லிக் கல்லூரி)

**பிரிவு -5**
ஜெ.சுலக்ஷன்யா/தொண்டைமனாறு வீ.ம.வித்)

**பாவோதல் பிரிவு-1**
ம.கோபிகா( யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி)

**பிரிவு-2**
ஜெ.யதுர்ஷனா(யா/மெதடிஸ் பெ.உ.பா)

**பிரிவு-3**
பா.நர்மதா(யா/வட இந்து மகளிர் கல் லூரி)

**பிரிவு-4**
கி.சாயிருபன்(யா/நெல்லியடி ம.ம.வி)

**பிரிவு-5**
அ.கயேந்தினி(யா/மெதடிஸ் பெ.உ.பா)

**இசையும் அசைவும் பிரிவு -1**
ந.வின்சிகா ( யா/கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தி)

**இசையும் அசைவும் தனி பிரிவு -2**
ர.அனுசாந் (யா/ஹாட்லி கல்லூரி)

**பிரிவு -3**
ஜெ.லாவண்யா( யா/வட மத்திய மகளிர் கல்லூரி)

**பிரிவு -4**
சோ.ரஜிந்தராஜ் (யா/ஹார்ட்லி கல்லூரி)

**பிரிவு -5**
ப.கௌசிகன் (யா/ஹாட்லி கல்லூரி)

**இசை குழு -1**
(யா/நெல்லியடி ம.ம.வி)

**இசைகுழு -2**
(யா/வட மத்திய மகளிர் கல்லூரி)

**தனி நடனம் பிரிவு-2**
பு.புகழினி(யா/மெதடிஸ் பெ.உ.பா)

**பிரிவு-3**
கு.திவ்யா(யா/வட மத்திய மகளிர் கல்லூரி)

**பிரிவு-4**
சி.நதுர்ஜா( யா/வட மத்திய மகளிர் கல்லூரி)

**பிரிவு-5**
கு.நிவேதிகா( யா/வட மத்திய மகளிர் கல்லூரி)

**குழு நடனம் -1**
(யா/உடுப் பிட்டி மகளிர் கல்லூரி)

***திறந்த போட்டிகள்***

**நாட்டிய நாடகம் -ஆடல்கதை**
(யா/உடுப் பிட்டி மகளிர் கல்லூரி)

**நாட்டார் பாடல்**
(யா/ஹாட்லிக் கல்லூரி)

**மேடை நாடகம்**
(யா/விக்கினேஸ்வராக் கல்லூரி)

**வில்லுப்பாட்டு**
(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**விவாதம்**
(யா/தொண்டைமானாறு வீ.ம.வித்)

**தமிழறிவு வினாவிடை**
(யா/விக்கினேஸ்வராக் கல்லூரி)

(ஸ்ரீ-19)

# யாழ்.பொது நூலகத்தில் மாபெரும் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் தரமான உயர் கல்வியைத் தேடும் இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் விதத்தில் இந்தியாவின் EdCILஅமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட கல்விக் கண்காட்சி இம்மாதம் கொழும்பில் நடாத்தப்பட்டதை தொடர்ந்து யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றுவருகிறது.

இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பூரண ஆதரவுடன் நடாத்தப்படும் இக் கண்காட்சியானது நேற்று ஆரம்பமாகி தொடர்ந்து இன்று புதன்கிழமை வரையும் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நடைபெறும். இந்தியாவில் கல்வி வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளவிரும்பும் யாழ்ப்பாண மாணவ சமூகத்தினர் தமக்குத் தேவையான தகவல்களையும் உதவிகளையும் இக் கண்காட்சி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள விரும்பும் இந்திய உயர் கல்வி நிலையங்களுக்கு உதவுவதும் இதன் மற்றுமொரு நோக்கமாகும் . ஜனாதிபதி விருது பெற்ற நிறுவனமாகிய **லங்கா எக்ஸிபிஷன் அன்ட் கொன்பரன்ஸ் சேர்விசஸ்**(LECS) இக் கண்காட்சிக்கான சகல ஏற்படுகளையும் செய்துள்ளது.

EdCIL அமைப்பு இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக விளங்குவதால் இந்தியாவிலுள்ள பிரபல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிலையங்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்ட இலங்கை மாணவர்களுக்கான அனுமதியைப் பெற்றுக் கொடுக்கும்.

சுமார் 50 கல்வி நிலையங்கள் கண்காட்சியில் நேரடியாகப் பங்குபற்றுவது மருத்துவம், பல்வைத்தியம், மருந்தியல், முகாமைத்துவம், விஞ்ஞானம், கலை, வர்த்தகம், விவசாயம், ஆசிரியத் தொழில், துணை மருத்துவம், தாதியத்தொழில், ஹொட்டேல் நிர்வாகம் ஆங்கிலமொழி போன்ற துறைகளில் பட்டதாரி, முதுநிலைப் பட்டதாரி, அல்லது கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொள்ள விரும்பும் இலங்கை மாணவர்களுக்கு சிறந்த வாய்ப்பாகும்.

நீண்டகாலமாகவே அநேகமான இலங்கை மாணவர்கள் தமது உயர் கல்விக்கு இந்தியாவை நாடி வருகின்றனர். அருகிலுள்ள நாடு, உலகப் புகழ் பெற்ற கல்வி நிலையங்கள், தரமான கல்வி, பல்வேறு வகையான கற்கைநெறிகள், வசதியான கட்டணங்கள், நட்புறவான சூழ்நிலை என்பனவே மாணவர்களையும் அவர்களது பெற்றோரையும் கவரும் காரணங்களாகும். இந்திய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தரமுயர்ந்த கல்விநிலையங்களினால் மருத்துவம், பொறியியல், கலை, கட்டடக் கலை, வியாபரம், சமூகசேவை, வணிகம், திட்டமிடல், முகாமைத்துவம் பத்திரிகைத் தொழில் போன்ற பல்வேறு துறைகளில் வழங்கப்படும் பல்வேறு மட்டங்களிலான கற்கை நெறிகளைப் பற்றி நேரடியாக அறிந்துகொள்ள இலங்கை மாண வர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் EdCIL இந்திய கல்விக் கண்காட்சி 2011 ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

(ஸ்ரீ-2)

# பாலம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

கிளிநொச்சி புதுமுறிப்பு கோணாவில் வீதியில் முதலாவது கிலோமீற்றர் பகுதியில் பழுதடைந்த பாலமொன்று புனரமைப்பதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியிலாளர் கே.ஜெயவீரசிங்கம் மேற் கொண்டு வருகின்றார்.

இப்பாலம் 17 இலட்சம் ரூபா செலவில் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

(ஸ்ரீ-10)

# கத்திவெட்டுக்கிலக்காகி குடும்பஸ்தர் படுகாயம்

(கரவெட்டி)

ஆழியவளை தாளையடிப் பகுதியில் இரு தரப்புக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் குடும்பஸ்தர் ஒருவர் பலத்த கத்தி வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கடந்த 15 ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகமேலும் தெரிய வருவதாவது, இருதரப்புக்கு இடையில்ஏற்பட்ட வாய்த்தகராறு வலுப் பெற்று எதிர்தரப்பினர் வீடு புகுந்து கத்தியால் வெட்டியதில் அப்பகுதியைச் சேர்ந்த கதிர்காமு சேதுறஞ்சன் (வயது 34) என்ற குடும்பஸ்தரே கத்தி வெட்டுக்கு இலக்காகி காலில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஸ்ரீ-24)


## 1 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

"வதன மஹால்" இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு.திருமதி எழில்ரஞ்சன்–ஷாமினா தம்பதியரின் செல்வப் புதல்வன்

**ஹிரோசணன்**



தனது முதலாவது பிறந்த தினத்தை 18.05.2011 இன்று புதன்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர்:

*அப்பா, அம்மா, பூட்டப்பா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார்.*

தகவல்: மாமாமார் (தீபன், கஜன்)

(4951)



## யாழ்.நகரிலும் பிரசித்திபெற்ற விடுதிக்கு ஆட்கள் தேவை

1. அறை ஒதுக்காளர் (Room Service)
2. சமையல் உதவியாளர் (Kitchen Helper)
3. ஆட்டோ செலுத்துவதுடன் சக மறுவேலைகளும் புரியக்கூடிய தன்மையுடையவர் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கும் வேலைக்கும் சமூகமளிக்கவும்.

மேற்கூறிய சகல தொழிலாளர்களும் நாம் ஓர் விடுதியின் வேலைக்குச் செல்கின்றோம் என்பதையும் விடுதியின் கட்டுப்பாடுகள், கட்டுக்கோப்புக்கள், வேலை நேரங்கள் சட்டபூர்வமாகப் பிரத்தியேகப்பட்டவை என்பதையும் விடுமுறை நாட்கள் ஒவ்வொர் தடவையும் குறிக்கப்பட்ட நாளிலேயே பெற்றுக்கொள்வதற்கு சட்டம் இடங்கொடுக்கவில்லை என்பதையும், குறைந்தபட்சம் வாரத்தில் ஒருநாளாவது விடுதி நிர்வாகத்தின் அனுமதியுடன் இருசாராருக்கும் சார்பானமுறையில் விடுமுறையைப் பெற்றுக்கொள்ளலாம்.

நேர்முகப் பரீட்சைக் காலம்- *19.05.2011* (வியாழன்)

நேரம்- பிற்பகல் 2.00 மணி முதல் 5 மணிவரை

குறிப்பு: குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினை உடையவர்களோ அல்லது அவ்விதம் பொய் சாட்டுக்கூறி வேலையைத் தளர்த்திக்கொள்ளும் ஊழியர்கள் தயவுசெய்து வாழ்க்கையில் முன்னேற இருக்கும் இளைஞர்களுக்கு வழியமைத்து அவர்களுக்குத் தடையின்றி நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்காமல் இருப்பதுடன் தவறி வேலை கிடைத்தாலும் நேர்மையானவர்களுக்கு வாய்ப்பளிக்கும் உள்ளங்களை வாழ்த்துகின்றோம்.

விடுதி நிர்வாகம்.

**Hotel ★★★ Lux Etoiles**
**ஹொட்டேல் "லுக்ஸ் எற்வால்ஸ்"**

No.34, Chetty Street Lane,
Nallur, Jaffna.

இல.34, செட்டித் தெரு லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(4955)

# சீன முஸ்லிம்களுக்கு பாக். பயிற்சி அம்பலப்படுத்துகிறது விக்கிலீக்ஸ்

எந்த சூழலிலும் நண்பர்களாக இருப்போம் என்று வாக்குறுதி அளித்த சீனாவுக்கு எதிராக, அந்நாட்டு உய்குர் முஸ்லிம்களுக்கு பாகிஸ்தான் தனது மண்ணில் பயங்கரவாத பயிற்சி அளித்த செய்தியை விக்கிலீக்ஸ் ஆவணங்கள் வெளியிட்டுள்ளன.

சீனாவின் மிகப்பெரிய மேற்கு மாகாணமான ஷிங்ஜியாங், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் மற்றும் தஜிகிஸ்தான் ஆகியவை, பாகிஸ்தான் நாடுகளின் எல்லையையொட்டி அமைந்துள்ளன. இம்மாகாணத்தில் முஸ்லிம்களின் பெரும்பான்மையைக் குறைக்கும் நோக்கத்தில் சீன அரசு ஹான் இனத்துச் சீனர்களை அதிகளவில் ஷிங்ஜியாங்கில் குடியேற்றியது. இதனால் இரு இனங்களுக்கும் இடையில் அடிக்கடி கலவரம் நடக்கும் சமயத்தில் கலவரம் மோதலாகக் கூடமாறிவிடும்.

இந்நிலையில், சமீபத்தில், விக்கிலீக்ஸ் இணையதளம், கியூபாவில் செயற்பட்டு வரும் அமெரிக்காவின் கொடும் சிறைச்சாலையான குவான்டனாமோ பற்றிய 700க்கும் மேற்பட்ட இரகசிய ஆவணங்களை வெளியிட்டது. அதில் சீனாவுக்கு எதிராக ஷிங்ஜியாங் பகுதி பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் பயிற்சி பெற்றது தெரியவந்துள்ளது.

ஷிங்ஜியாங்கை சீன அரசிடம் இருந்து பிரித்து கிழக்கு துருக்கிஸ்தான் என்ற பெயரில் தனி நாடாக உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கிழக்கு துருக்கிஸ்தான் இஸ்லாமிய இயக்கம் என்ற இயக்கம் செயற்பட்டு வருகிறது. சீன, அமெரிக்க அரசுகளாலும், ஐ.நா.வாலும் இந்த இயக்கம் பயங்கரவாத இயக்கம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு குண்டு வெடிப்புகளுக்கும் இவ்வியக்கம் பொறுப்பேற்றுள்ளது.

குவான்டனாமோ சிறையில் உள்ள உய்குர் இனத்தைச் சேர்ந்த பயங்கரவாதிகளில் 22 பேரின் இரகசிய ஆவணங்கள் விக்கிலீக்ஸால் சமீபத்தில் வெளியிடப்பட்டன. அவர்களில் பெரும்பான்மையோர் பாகிஸ்தானில் பிடிபட்டவர்கள். பாகிஸ்தானில் பயங்கரவாத பயிற்சிகள் பெற்றதாக, இவர்களின் சிறை விபரப் பட்டியல்கள் தெரிவிக்கின்றன.

பொதுவாக இவர்கள், சீனாவை அந்நிய நாடாகவே பார்க்கின்றனர். அல்-கொய்தாவுடன் இணைந்து செயற்பட்டால் தங்கள் போராட்டம் இன்னும் தீவிரம் அடையும் எனக் கருதுகின்றனர். இவர்களில் அகமது யாக்கூப் என்பவர் கிழக்கு துருக்கிஸ்தான் இயக்கத்தின் முக்கியமானவர். மேலும் ஆப்கானின் தோராபோரா மலைப் பகுதியில் ஒசாமா பின்லேடனுடன் இணைந்து செயற்பட்டவர்.

ஷிங்ஜியாங் பகுதியில் பங்கரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க சீனா பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருகிறது.

பயங்கரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க, பாகிஸ்தானையும்சீனாநம்பவேண்டியிருக்கிறது. ஆனால் சீன அரசுக்கு எதிராக, சீன குடிமக்களில் ஒருசாராரைத் தூண்டிவிடுதலும், அவர்களுக்கான பயங்கரவாதப் பயிற்சிகள் கொடுக்கப்படுதலும் அதே பாக். மண்ணில் தான் நடக்கிறது என்பது தான் தற்போது சீனாவுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாகவுள்ளது. (ஸ்ரீ-2)

## அசுர வேகத்தில் அணுஉலை கட்டும் பாகிஸ்தான்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அசுர வேகத்தில் அணு உலை கட்டுமானப் பணிகளை முடுக்கி விட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. பாகிஸ்தானின் குஷாப் மாகாணத்தில் அணு உலைகள் இருக்கின்றன.

ஏற்கனவே 3 அணு உலைகள் அமைந்துள்ள நிலையில், 4 ஆவது அணுஉலை கட்டுமானப் பணிகள் அசுர வேகத்தில் நடந்து வருகிறது.

பாகிஸ்தான் அணு ஆயுதங்கள் தயாரிப்பதை தடுத்த நிறுத்த வேண்டும் என்றும் அணு உலைகள் அமைப்பதற்கு கெடுபிடிகளை விதிக்க வேண்டும் என்றும் சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

2013ஆம் ஆண்டு 4ஆவது அணு உலை கட்டுமானப் பணிகள் முடியும் என பாகிஸ்தான் வட்டாரம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ)




## பாகிஸ்தானில் அத்துமீறி நுழைந்து நேட்டோ படையினர் தாக்குதல்

## அதிர்ச்சியில் உறைந்தது பாகிஸ்தான்




பாகிஸ்தான் இராணுவச் சோதனைச் சாவடி மீது நேட்டோ படையினர் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தியதில் பாகிஸ்தான் வீரர்கள் இருவர் காயமடைந்துள்ளனர்.

இது குறித்து தெரியவருவதாவது,

பாகிஸ்தானில் பதுங்கி இருந்த ஒசாமாவை கடந்த 2ஆம் திகதி அமெரிக்க உளவுத்துறையினர் அதிரடி தாக்குதல் நடத்தி கொன்றனர். இதனையடுத்து அமெரிக்கா-பாகிஸ்தான் உறவில் சற்று விரிசல் ஏற்பட்டது என்றாலும் இரு தரப்பினரும் வெளிப்படையாக காட்டிக் கொள்ளவில்லை.

இந்நிலையில் ஆப்கானில் முகாமிட்டுள்ள நேட்டோ படையை சேர்ந்த 2 ஹெலிகொப்டர்கள் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைந்தது. வடக்கு வர்ஜிஸ்தான் மலைப்பகுதியில் உள்ள டாட்டா கேல் பகுதியில் உள்ள பாகிஸ்தான் இராணுவ சோதனைச்சாவடி மீது இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. இதற்கு பதிலாக பாகிஸ்தான் வீரர்கள் எதிர்த்தாக்குதல் நடத்தினர். ஆனால் ஹெலிகொப்டர் தப்பித்து பறந்து சென்று விட்டது. பாகிஸ்தான் வீரர்கள் 2 பேர் காயமுற்றனர். இந்த சம்பவம் குறித்து பாகிஸ்தான் உளவுத்துறை அதிகாரிகள், அதிர்ச்சி வெளியிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)



**தொழில்நுட்ப கோளாறு உள்ளிட்ட காரணங்களால் விண்ணில் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதைத் தொடர்ந்து எண்டவர் விண்கலம், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி நிலையத்தில் உள்ள நாசா விண்வெளி மையத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணிற்குச் சீறிப் பாய்ந்தது.**

## பாலியல் குற்றச்சாட்டில் கைதான சர்வதேச நாணயநிதிய தலைவருக்கு சிறை


அமெரிக்காவில் கைது செய்யப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் டொமினிக் ஸ்ட்ரோஸ் கானின் பிணை மனு நிராகரிக்கப்பட்ட நிலையில் அவர் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்.

ஹோட்டலொன்றின் பணிப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 62 வயதான டொமினிக் ஸ்ட்ரோஸ் கான், மன்ஹெட்டன் நகர நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர் படுத்தப்பட்டார். பிரெஞ்சு பிரஜையான டொமினிக் கானை 10 இலட்சம் டொலர் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு அவரின் சட்டத்தரணிகள் கோரினர். எனினும் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றதாக கூறப்படும் மேற்படி பாலியல் வல்லுறவு தொடர்பாக அரச தரப்பு சட்டத்தரணிகள் விபரித்தனர்.

அதையடுத்து ஸ்ட்ரோஸ் கானின் பிணை மனு நிராகரிக்கப்பட்டது. அவர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நியூயோர்க்கில் நாளாந்தம் 3000 டொலர் கட்டணம் அறவிடப்படும் ஹோட்டல் அறையொன்றில் தங்கியிருந்த போது அந்த அறையை சுத்தம் செய்ய சென்ற பணிப் பெண்ணை பாலியல் வல்லுறவுக் குட்படுத்தியதாக ஸ்ட்ரோஸ் கான் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. பிரான்ஸுக்கு செல்வதற்காக விமானத்தில் ஏறியிருந்தபோது அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## கடாபியைக் கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் முனைப்பு

## லிபிய அரசு உடனடிப் போர் நிறுத்தம்



கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்ய சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தயாராகிவிட்ட நிலையில், லிபிய அரசு திடீரென உடனடிப் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

லிபியாவில் அதன் தலைவர் கடாபிக்கு எதிரான மக்கள் போராட்டம், நான்காவது மாதமாகத் தொடர்கிறது. கடாபித் தரப்பு இராணு வத்தின் போர்க் குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் ஏற்கனவே சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன.

இதைத் தொடர்ந்து கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இறங்கியுள்ளது. இது குறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை பேட்டியளித்த அந் நீதிமன்ற சட் டத்தரணி கடாபி மற்றும் அவரது மகன்களைக் கைது செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் கிட்டத்தட்ட முடிந்து விட்டன என்றார்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐ.நாவின் சிறப்புத் தூதர் அப்துல் இலா அல் காதிப் லிபியாவுக்கு சென்று பிரதமர் பாக்தாதி மஹ்மூதியைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பிற்குப் பின் பேட்டியளித்த மஹ்மூதி லிபிய அரசு உடனடிப் போர் நிறுத்தத்தை விரும்புகிறது. அதோடு, நேட்டோவும் தனது தாக்குதல் களை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஜனநாயகப் பேச்சுவார்த்தைகள் மூலம், லிபிய மக்கள் தங்கள் உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான உரிமைகளை உடையவர்கள் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## சவுதி அரேபிய தூதரக அதிகாரி பாகிஸ்தானில் சுட்டுக் கொலை

பாகிஸ்தான் கராச்சி நகரில் உள்ள சவுதி அரேபிய தூதரகம் முன்பு கடந்த சில தினங்களுக்கு முன்பு வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த நிலையில் கராச்சியில் நேற்று முன்தினம் அரேபிய தூதரக அதிகாரி ஹசன் அல்கதானி அடையாளம் தெரியாத மர்ம மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே இந்தக் தாக்குதலை நடத்தினார்கள்.

இஸ்லாமாபாத்தில் உள்ள சவுதி அரேபிய தூதரகம் அதிகாரி சுட்டுக்கொல்லப்பட்டதை உறுதி செய்தது. இந்த தாக்குதல் சம்பவத்துக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப் பேற்கவில்லை.

இதனையடுத்து பாகிஸ்தானில் உள்ள சவுதி அரேபிய தூதரக அதிகாரிகளுக்கு உரிய பாதுகாப்பை அளிக்குமாறு சவுதி அரேபிய வெளியுறவு இணை மந்திரி பாகிஸ்தான் அரசை கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

ஆறாத மரத்தை வேலைக்கு அதிகமாக உபயோகிக்கக் கூடாது. அதுபோலத்தான் பண்படாத அறிவும்.

– ஹோம்ஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# துரியோதனனைச் சந்தித்தால் சூழ்ச்சி தருமரைச் சந்தித்தால் இராஜதந்திரம்

ஒரு பொருளை விளங்க வைப்பதற்கு வேறுபட்ட சொற்பதங்களை பயன்படுத்தும் சிறப்பு தமிழில் மட்டுமே உண்டு.

நாங்கள் பிறந்தோம். யேசுபிரான் அவதரித்தார். முருகன் உதித்தார். இவ்வாறு பிறப்பைக்கூட பிறந்தவரின் திருத்தன்மை கருதி தோன்றினார்– அவதரித்தார்– உதித்தார் என்ற சொற்பதங்களைப் பயன்படுத்தி அவரவர் பெருமையை சொற்களின் ஊடாக வெளிப்படுத்துகின்றோம்.

இது போன்று பலவற்றை உதாரணமாக காட்டலாம்.

அதில் சந்திப்பு, தூது, பேச்சுவார்த்தை, சூழ்ச்சி, இராஜதந்திரப் பேச்சு, எச்சரிக்கை எனப் பல வகை உண்டு.

இரண்டு நாட்டுப் பிரதிநிதிகள் சந்தித்துக் கொண்டால் அது சந்திப்பு. ஒரு பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட இரு பகுதியினர் கூடியிருந்து ஆராய்ந்தால் அது பேச்சுவார்த்தை என அழைக்கப்படும்.

இதேபோல் சூழ்ச்சியும், இராஜதந்திரப் பேச்சுவார்த்தையும் உள்ளன. இவற்றை விளக்குவதற்கு உதாரணங்களைத் தருவது விளங்கிக் கொள்வதற்கு சுலபமாகும்.

அதாவது, துரியோதனனும் சகுனியும் சந்தித்தால் அது சூழ்ச்சி. தருமரும் கண்ணனும் சந்தித்தால் அது இராஜதந்திரப் பேச்சு.

சூழ்ச்சி என்பது கூட்டுச்சேர்ந்த இருவர் அழிவை ஏற்படுத்த வியூகம் அமைப்பது. இராஜதந்திரப் பேச்சு என்பது பிரச்சினையிலிருந்து சுமுகமாக தீர்ப்பதற்காக ஆராய்வது.

இப்போது சந்திப்பு, பேச்சு, சூழ்ச்சி, இராஜதந்திரம் என்பன பற்றி அறிந்துகொண்ட நமக்கு ஒரு பெரும் வினா முன்னெழுந்து நிற்கிறது.

அதாவது, இந்தியாவுக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இந்தியத் தலைவர்களைச் சந்தித்து, ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் விளக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இந்தியாவுக்கு விளக்கம் கொடுத்தல் என்பதான பொருளை உணரமுடியாமல் உள்ளது.

எதற்காக இந்தியாவுக்கு விளக்கம் கொடுப்பது? ஏன் விளக்கம் கொடுப்பது? எப்படி விளக்கம் கொடுப்பது? என்ற சிக்கலான விடயம் எல்லோரையும் குழப்பவே செய்யும்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் அமைச்சர் பீரிஸ் இந்தியாவுக்கு விளக்கம் கொடுப்பது என்பதை நினைக்கும்போது; கல்யாணத்திற்கு புரோகிதம் செய்த குருவிற்கு தாலி கட்டுப்பற்றி மாப்பிள்ளை விளக்கம் கொடுப்பதற்கு ஒப்பானதாக இருக்கிறது.

பரவாயில்லை, யார் எப்படி விளக்கம் கொடுத்தாலும் அதுபற்றி நமக்குக் கவலையில்லை.

ஆனால் பேராசிரியர் பீரிஸும், இந்தியத் தலைவர்களும் சந்தித்துக் கொள்வதை சந்திப்பு, பேச்சுவார்த்தை, சூழ்ச்சி என்ற வகைமையில் எதற்குள் அடக்குவது என்பதுதான் எங்கள் வாதம்.

சரியான விடை தெரிந்தால் அதன் கீழ் கோடு கீறிக் கொள்ளுங்கள்.

# மாணவர்களுக்கான ஆலோசனை மையங்களை யாழ்.குடாநாட்டில் அமைக்க வேண்டும்

## இந்திய உயர் அதிகாரிகளிடம் துணைவேந்தர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பல்லைக்கழகத்திற்கு தெரிவாகாத மாணவர்களுக்கான ஆலோசனை மையங்களை யாழ். குடாநாட்டில் அமைக்க வேண்டும் என இந்திய உயரதிகாரிகளிடம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரட்ணம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவின் கல்விக் கண்காட்சி நேற்று யாழ். பொதுநூலக மண்டபத்தில் ஆரம்பமானது.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். குடாநாட்டை பொறுத்தவரை இவ்வாறான கல்விக் கண்காட்சிகள் இம்பெறுவது அத்தியாவசியமான தொன்றாகும்.

அத்தோடு உயர்தரத்திற்கு பின்பு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கப் பெறாத நிலையில் பல மாணவர்கள் மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாதுள்ளனர்.

இவ்வாறான மாணவர்களுக்கு மேற்கொண்டு உயர் கல்வியை பெற்று தொழில் துறைகளுக்குள் செல்வதற்கு உரிய ஆலோசனைகளை வழங்கக் கூடிய மையங்கள் இங்கு இல்லை.

இந்திய அரசாங்கத்தால் இவ்வாறான மையங்கள் இங்கு உருவாக்குவதன் மூலம் இங்குள்ள மாணவர்கள் இந்தியா போன்ற நாடுகளில் உயர் கல்வியை பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும்.

எனவே படித்துவிட்டு தொழிற் துறைகளை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவர்களுக்கு வழிகாட்டக் கூடிய ஆலோசகர்களை நியமித்து அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவி புரிய வேண்டும்.

மேலும் இளைஞர் யுவதிகள் தவறான பாதைக்கு செல்வதற்கு இது போன்ற வழி நடத்தல் இல்லாமையே காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ–6)

# யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு 250மில்.ரூபா.செலவில் கட்டடம்

## சிறைச்சாலை உதவி மேற்பார்வையாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் ஆரம்பிக்கப்படும் என யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் உதவி மேற்பார்வையாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

2 ஆயிரத்து 500 கைதிகள் தங்க வைக்கக்கூடிய வசதிகளுடன் இந்த புதிய சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளது.

இதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதோடு 250 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியுள்ளது.

இலங்கையிலேயே வாடகைக்கு பெறப்பட்ட கட்டடத்தில் சிறைச்சாலை இயங்குவது யாழ்ப்பாணத்தில்தான் எனவும் அவர் தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் கைதிகளுக்கு நிகழ்வுகள் நடத்தும் போது இடப்பற்றாக்குறை காணப்படுவதோடு போதிய வசதிகளும் இல்லாதுள்ளது.

அதுமட்டுமின்றி கைதிகளை உரிய முறையில் பாதுகாப்பாக சிறை வைப்பதற்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

வீதியின் ஓரத்தில் சிறைச்சாலை அமைந்திருப்பதால் கைதிகள் தப்பித்து செல்வதற்கு இலகுவாயுள்ளது.

இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டே நவீன முறையில் புதிய சிறைச்சாலை அமைக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ–6)

# விடுதலைப் புலிகளின் பிரசாரப் பொருட்கள் மீட்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாரியளவிலான பிரசாரப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுவரொட்டிகள் உள்ளிட்ட பல்வேறு பிரசாரப் பொருட்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கொள்கலன் ஒன்றில் கனடாவிற்கு அனுப்பி வைக்கப்படவிருந்த பொருட்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. சென்னையிலிருந்து கப்பல் மூலமாக இந்தப் பொருட்கள் கனடாவிற்கு அனுப்பி வைக்கப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகத்தின்பேரில் குறித்த கொள்கலன்களை கொழும்பு சுங்கப் பிரிவினர் சோதனையிட்ட போது பாரிய அளவிலான புலிகளின் சுவரொட்டிகள் மற்றும் ஏனைய பிரசாரப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

எங்கிருந்து யாரால் இந்தப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ–2)

# மக்கள் கலை இலக்கிய அரங்கம் அங்குரார்ப்பணம்


(யாழ்ப்பாணம்)

மக்கள் கலை இலக்கிய அரங்கம் அங்குரார்ப்பணமும் கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வும் இன்று புதன் கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக யாழ். மாநகர சபைமுதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசியுரையை நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்னிந்தியத் திருச்சபை அதி வண. கலாநிதி.டி.தியாகராசா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ–2)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



## உழைக்கும் கைகள் வேண்டும்

கடவுள் பிரம்மாண்டமான வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியான பரிதி எங்கும் கிடையாது. ஆனால் வட்டத்தின் மையம் அனைத்து இடங்களிலும் உள்ளது.

எதையும் பரபரப்புடன் செயற்படுத்தக்கூடாது. மாறாக தூய்மை, பொறுமை விடாமுயற்சி இம்மூன்றும் வெற்றிக்கு தேவை.

நீ ஏற்கனவே தீர்க்கதரிசியாகத் தான் இருக்கிறாய். ஆனால் அதை அறியாமல் இருக்கிறாய். இதை நீ உணர வேண்டும்.


ஆன்மீக வாழ்க்கைக்கோ, மனதுக்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டு பண்ணும் எதையும் உன் கால்விரலால் கூட தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாக புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கை.

இரக்கம் உள்ள இதயம் , சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் நமக்குத் தேவை.

எல்லாப் பேய்களும் நம் மனதில் தான் இருக்கின்றன. மனம் கட்டுப்பட்டு அடங்கியிருந்தால் எந்த இடத்தில் நாம் இருந்தாலும் எங்கிருந்தாலும் அது சொர்க்கமாக மாறிவிடும்.

# ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நியூயோர்க் போராட்டத்தில் திராவிடர் கழகம் பங்கேற்பு

## கி. வீரமணி அறிவிப்பு



(சென்னை)

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நியூயோர்க் நகரில் உள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக நடைபெறும் போராட்டத்தில் திராவிடர் கழகம் சார்பில் அதன் தலைமை நிலையச் செயலர் கலந்து கொள்கிறார் என்று அக்கட்சியின் தலைவர் கி.வீரமணி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

மே 18 ஆம் திகதி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நியூயோர்க் நகரில் ஐ.நா. தலைமை அலுவலகம் முன் நடைபெறும் போராட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதனை திராவிடர் கழகத்தின் சார்பில் பாராட்டி வரவேற்கிறோம்.

திராவிடர் கழகத் தலைமை நிலைய செயலாளர் வீ. அன்புராஜ் அந்தப் போராட்டத்தில் பங்கேற்கவுள்ளார். பெரியார் பன்னாட்டு அமைப்பின் சார்பில் மருத்துவர் சோம. இளங்கோவன் மற்றும் தோழர்களும் பங்கேற்கின்றனர்.

மேலும் நியூயோர்க்கில் நடக்கும் போராட்டத்திற்குப் பின் ஏற்படும் விளைவுகளைத் தொடர்ந்து நிலைமையைப் பரிசீலித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளில் திராவிடர் கழகம் இறங்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் நாட்டில் அரசியல் கண்ணோட்டம் இல்லாமல் இந்திய அரசை வற்புறுத்தும் வழிவகைகள் காண அனைவரும் முன்வர வேண்டும் என்பது நமது முக்கிய வேண்டுகோள். இவ்வாறு கி.வீரமணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# ராணா படத்தை கைவிடவில்லை

## கே.எஸ். ரவிக்குமார் தெரிவிப்பு

கடந்த 29ஆம் திகதி சென்னையில் உள்ள ஏ.வி.எம் ஸ்டூடியோவில் ரஜினி நடிக்கும் ராணா படப்பிடிப்பு ஆரம்பமானது. இந்நிலையில் திடீரென உடல்நலக்குறைவு காரணமாக அன்று இரவு இசபில்லா மருத்துவமனையில் ரஜினி அனுமதிக்கப்பட்டார். இரண்டு நாள் மருத்துவ சிகிச்சைக்குப் பின் வீடு திரும்பினார். தற்போது மீண்டும் கடந்த 13 ஆம் திகதி போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரஜினி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதால் ராணா படப்பிடிப்பு தொடர்ந்து நடக்குமா? என்று பலர் கேள்வி எழுப்பினர். படம் கைவிடப்பட்டதாகவும் செய்திகள் பரவின.

இந்நிலையில் ராணா படம் கைவிடப்பட்டதா? என்று அப்படத்தின் இயக்குநர் கே.எஸ் ரவிக்குமாரிடம் கேட்ட போது, ராணா படத்தை நிறுத்தவில்லை. ஜூலையில் தான் இதன் படப்பிடிப்பை ஆரம்பிக்க திட்டமிட்டு இருக்கிறோம். படத்தை கைவிட்டு விட்டதாக வெளியான செய்திகள் தவறானவை. அதை நம்ப வேண்டாம். குறிப்பிட்ட நாளில் திட்ட மிட்டபடிபடப்பிடிப்பு ஆரம்பிக்கும் என்றார். (ஸ்ரீ-2)

# நடிகர் வடிவேலுவின் பண்ணை வீடு மீது 30 பேர் கொண்ட குழு தாக்குதல்



சென்னையை அடுத்த படப்பை அருகிலுள்ள வடிவேலுவின் பண்ணை வீட்டின் கண்ணாடி ஜன்னல்கள் மர்ம நபர்களால் அடித்து நொறுக்கப்பட்டது.

படப்பையை அடுத்த புஷ்பகிரி பகுதியில் நடிகர் வடிவேலுவுக்கு மாமர தோப்புடன் கூடிய பண்ணை வீடு உள்ளது. இங்கு வேலு என்பவர் காவலாளியாக வேலை செய்து வருகிறார்.

வேலு தனது குடும்பத்துடன் இந்த தோப்பில் தனி வீட்டில் வசித்து வருகிறார். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை வடிவேலுவின் பண்ணைக்கு வந்த சுமார் 30 இற்கு மேற்பட்ட மர்ம நபர்கள் காவலாளி வேலுவிடம் வடிவேலுவின் தொலைபேசி எண்ணைக் கொடுக்குமாறு மிரட்டியுள்ளனர். அதற்கு அவர் தொலைபேசி எண் தெரியாது என்று கூறியுள்ளார்.

உடனே மர்ம நபர்கள் வேலுவுடைய கைத்தொலைபேசியை பிடுங்கி அதில் வடிவேலுவின் நம்பர் இருக்கிறதா என பார்த்தனராம். அதில் நடிகர் வடிவேலுவின் எண் இல்லாததால் அதனை அவரிடம் கொடுத்த மர்ம நபர்கள் வீட்டின் 6 கண்ணாடி ஜன்னல்களை அடித்து நொறுக்கினர். எதிர்வரும் சனிக்கிழமைக்குள் இந்த இடத்தை காலி செய்து விட வேண்டும் என்றும் இல்லையென்றால் நாங்களே இயந்திரம் கொண்டு வந்து வீட்டை இடிப்போம் என்றும் மிரட்டிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து காவலாளி வேலு பண்ணை மேலாளர் சங்கருக்கு இந்தத் தகவலைத் தெரிவித்தார். மேலாளர் சங்கர், மணிமங்கலம் பொலிஸ் நிலையத்தில் புகார் தெரிவித்தார். இது குறித்து மணிமங்கலம் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். (ஸ்ரீ)

# பாரதச் செய்திகள்

# தமிழக தலைமைச் செயலக இடமாற்றம் சர்ச்சையில்

(சென்னை)


தமிழக சட்டமன்றத்தையும் தலைமைச் செயலகத்தையும் அதன் புதிய வளாகத்திலிருந்து புனித ஜோர்ஜ் கோட்டையின் பழைய வளாகத்திற்கு மாற்றப்பட்டிருப்பது சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளது.

1200 கோடி ரூபாய் செலவில் உருவான புதிய வளாகத்தைக் கைவிட்டு தலைமைச் செயலகம் மற்றும் சட்டமன்றத்தினை முன்பு இருந்த புனித ஜோர்ஜ் கோட்டைக்கே மாற்றும் யோசனையை கைவிடுமாறு முதல்வர் ஜெயலலிதாவை பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் டாக்டர் இராமதாஸ் கோரியுள்ளார்.

தமிழகத்தில் உடனடியாக கவனம் செலுத்தி தீர்க்க வேண்டிய பிரச்சினைகள் ஏராளமாகவுள்ளன என்று ஜெயலலிதாவே கூறியிருக்கும் போது தமிழக மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வருவாயைப் பெருக்குவதில் கவனம் செலுத்தாமல் இப்படி இடம்பெயர்வது மக்களின் மனதில் எதிர்மறையான எண்ணங்களையே ஏற்படுத்தும் என தான் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இராமதாஸ் எச்சரித்துள்ளார்.

ஆனால், தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள புதிய முதலமைச்சர் ஜெயலலிதா தலைமைச் செயலகம் முன்பு இயங்கி வந்த புனித செயிண்ட் ஜோர்ஜ் கோட்டைக்குச் சென்று தனது அலுவல்களைத் தொடங்கியுள்ளார். தேர்தல் முடிவுகள் வந்த ஒரு நாளிலேயே பழைய தலைமைச் செயலகத்தில் பெயர்ப் பலகைகள் மாற்றப்பட்டிருந்தன. (ஸ்ரீ-2)

# தஞ்சை பெரியகோயில் சென்ரிமென்ட் தி.மு.க. ஆட்சி பறிபோன பரிதாபம்



(தஞ்சாவூர்)

தஞ்சை பெரிய கோவிலுக்குள் பதவியில் இருப்பவர்கள் வந்து சென்றால் அவர்கள் பதவி பறிபோகும் என்பது இந்தத் தேர்தல் மூலம் மீண்டும் நிருபணமாகியுள்ளது. தஞ்சைப் பெருங் கோயிலுக்கு வி.ஐ.பி. கள் வந்து சென்றால் அவர்கள் பதவி பறிபோகும், உயிர் போகும் என பல கருத்துகள் நிலவுகின்றன.

இதனால் இங்கு பெரும்பாலான வி.ஐ.பி.கள் பெரிய கோயிலுக்குள் செல்வ தைத் தவிர்ப்பர். இதற்கு பிரதமராக இருந்த இந்திரா, முன்னாள் ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா, முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். போன்றோரை உதாரணமாகக் கூறுவர். தஞ்சைப் பெரிய கோயில் கும்பாபிஷேகத்தின்போது ஏற்பட்ட தீ விபத்தில் 50இற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இச்சம்பவம் அறிந்து அப்போதைய முதல்வராக இருந்த கருணாநிதி கோவிலின் நேர் வழியாக வரா மல் பக்கவாட்டு வாசல் வழியாக வந்து கோயி லுக்குள் செல்லாமல் சம்பவ இடத்தை மட்டும் பார்வையிட்டுச் சென்றார். இதுபோல பல உதாரணங்களைக் கூறலாம்.

கடந்த செப்டெம்பர் 22 முதல் 26ஆம் திகதி வரை தஞ்சைப் பெருங்கோயிலில் ஆயிரமாவது ஆண்டு விழா நடந்தது. 25 ஆம் திகதியன்று கோவிலுக்குள் பத்மா சுப்பிரமணியம் தலைமையில் ஆயிரம் நடனக் கலைஞர்கள் நடனமாடினர்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்க பட்டு வேட்டி, சட்டை சகிதமாக வந்த கருணாநிதி பிரதான வாயில் வழியாக வராமல் சிவகங்கை பூங்கா வழியாக தெற்குப்புற வாயில் வழியாக வந்து மூலஸ்தானத்திற்குப் பக்கவாட்டில் அமர்ந்து நிகழ்ச்சியைக் கண்டுகளித்தார். பெரியகோயிலுக்குள் முதல்வர் வந்துசென்றதால் பெரிய கோயில் சென்டி மென்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதாகப் பலரும் கருதினர். அடுத்த நாள் நிறைவு விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் ராஜா பேசுகையில், இந்த நாள் கணக்கு பார்க்கும் நாள், கணக்குத் தீர்க்கும் நாள். ராஜராஜன் காலத்தில் சதுர்வேதி மங்கலங்களை உருவாக்கினார். ஆனால் தி.மு.க. தலைவர் கருணாநிதி சமத்துவபுரத்தை உருவாக்கி, அவர் காலத்தைச் சேர்ந்த ஆதிக்க கணக்கை கருணாநிதி தீர்த்துள்ளார் என பேசிச் சென்றார்.

கடந்த நவம்பரில் 2ஜி ஸ்பெக்ட்ரம் பிரச்சினையில் சிக்கிய ராஜா பதவியிழந்து, கைதாகி இன்றுவரை வெளியே வர இயலாத வகையில் டில்லி திகார் சிறையில் சிக்கித் தவிக்கிறார். 2ஜி ஸ்பெக்ட்ரம் பிரச்சினையால் காங்-தி.மு.க. உறவும் பலகட்டப் பிரச்சினைகளைச் சந்தித்து கனிமொழி, தயாளு போன்றோரிடம் சி.பி.ஐ. விசாரணை, கலைஞர் ரி.வி அலுவலகத்தில் ரெய்ட், குற்றப்பத்திரிகையில் கனிமொழி பெயர், தொடர் விசாரணை, எந்நேரமும் கைதாகலாம் என்ற நிலை, தேர்தல் கூட்டணியில் இழுபறி எனத் தொடர்ந்த சிக்கல் பெரிய கோயில் சென்ரிமென்டை மீண்டும் நிரூபித்துள்ளது.

தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றாவிட்டாலும் மத்தியில் அங்கம் வகிப்பதால் தங்களை அ.தி.மு.க.விடம் இருந்து காத்துக் கொள்ளலாம் என எண்ணிய தி.மு.க.வுக்கு தேர்தல் முடிவும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சியாகக்கூட அமர இயலாத அளவிற்கு தஞ்சைப் பெரியகோயில் சென்ரிமென்ட் தன் வேலையைக் காட்டியுள்ளது என்பது இந்த சென்ரிமென்ட் மீது நம்பிக்கை வைத்தவர்களை மீண்டும் முணுமுணுக்க வைத்துள்ளது. (ஸ்ரீ-2)

# சட்டசபை மாற்றத்திற்கு வை.கோ கடும் எதிர்ப்பு

(சென்னை)

தமிழக சட்டப்பேரவைக்கட்டடத்தை மாற்றக் கூடாது என்று ம.தி.மு.க வலியுறுத்தியுள்ளது.

மதிமுகவின் அரசியல் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அப்போது இது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டமன்றத்தை மாற்றுவது ஏற்பு உடையது அல்ல. மக்கள் வரிப்பணத்தில் கட்டப்பட்ட புதிய கட்டடத்திலேயே சட்டமன்றம் தொடர்ந்து இயங்க வேண்டும் என்று இக்கூட்டம் வலியுறுத்துகிறது என ம.தி.மு.க தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (ஸ்ரீ-2)

# சுனாமிபோல் சுழன்றடித்தார் கில்கிறிஸ்ட் பெங்களூர் அணியை அடக்கியது பஞ்ஜாப்

(தராம்சலா)

கில்கிறிஸ்ட், மார்ஷ், சாவ்லாவின் அபார ஆட்டத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 111 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது.

இதில் தராம்சலாவில் நேற்று நடைபெற்ற 63 ஆவது போட்டியில் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் ஹோலி (பதில்)தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய கிங்ஸ்லெவின்பஞ்ஜாப் அணிக்கு வல்தாதி-கில்கிறிஸ்ட் ஜோடி அதிரடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் வல்தாதி 17 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 20 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஷோன் மார்ஷ் சிறப்பாக ஆட மறுமுனையில் கில்கிறிஸ் அதிரடி காட்டினார். தொடர்ந்து கில்கிறிஸ்ட் சிக்ஸ்சர், பவுண்டரி விளாச கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 10.1 ஓவர்களில் 100 ஓட்டங்களை எட்டியது.

இதில் கில்கறிஸ்ட் 25 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் அதிரடி இணைப்பாட்டத்தின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 17.3 ஓவர்களில் 200 ஓட்டங்களைத்தாண்டியது.

இதில் ஷோன் மார்ஷ் 34 பந்துகளில் அரைச்சதம் கடந்து கலக்கினார்.

மறுமுனையில் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 53 பந்துகளில் சதம் விளாசி அசத்தினார்.

எனினும் அணித்தலைவர் அடம் கில்கிறிஸ்ட் 55 பந்துகளில் (8 பவுண்டரிகள், 9 சிக்ஸர்கள் அடங்கலாக) 106 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையிழந்து 232 ஓட்டங்களைக் குவித்தது. இதில் ஷோன் மார்ஷ் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் (7 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் உட்பட) 79 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் லாங்வேல்ட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 233 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணிக்கு கிறிஸ்ஹயில்-சௌரவ் திவாரி ஆரம்பம் வழங்கினர்.

இதில் பிரவீன் குமார் வீசிய முதலாவது ஓவரில் கிறிஷ்ஹயில் ஓட்டங்கள் பெறத்திணறினார். முதல் ஓவரில் ஒரு ஓட்டத்தையும் வழங்காமல் பிரவீன் குமார் சமாளித்தார்.

அடுத்த ஓவரின் 3 ஆவது பந்தில் கிறிஸ் ஹயில் பூச்சியத்துடன் ஹரிஸின் பந்தில் விக்கெட் காப்பாளர் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித்தலைவர் விராட் ஹோலி 11 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 11 ஓட்டங்களுடன் ஹரிஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சௌரவ் திவாரி 6, அடன்பதான் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 7 ஓவர்களில் 43 ஓட்டங்களைஎடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்தது.

அடுத்து டிவில்லியர்ஸ்சுடன் இணைந்த கைப் 11 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 15 ஓட்டங்களை எடுத்துஆட்டமிழந்து ஏமாற்றினர். தொடர்ந்து அருண்கார்த்திக் 6 ஓட்டங்களுடன் வெளியேறினர்.

அடுத்து நம்பிக்கையளித்த ஏபி.டிவில்லியர்சும் 27 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில்பெங்களூர்றோயல் சலஞ்ஜர்ஸ் அணி 17 ஓவர்களில் 121 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதன் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 111 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் பியூஸ் சாவ்லா4 விக்கெட்டுக்களையும் ரியான் ஹரிஸ் 3, சிறிவாஸ்தவா 2 விக்கெட்டுக்களையும் வல்தாதி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இவ் வெற்றியின் மூலம் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி தான் விளையாடிய 13 ஆவது போட்டியில் 7 ஆவது வெற்றியைப் பதிவு செய்து அடுத்த சுற்று வாய்ப்பைத் தக்க வைத்தது.

இப் போட்டியில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியின் வெற்றிக்கு வழிசமைத்த அணித்தலைவர் கில்கிறிஸ்ட் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை தொடர்ச்சியாக 7 போட்டிகளில் வெற்றிநடைபோட்ட பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி அடக்கியது.

## ஐ.பி.எல்-2011

| சிக்ஸ்சர் | பவுண்டரி |
|---|---|
| 535 | 1655 |

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 13 | 8 | 4 | 0 | 1 | 17 | +0.283 |
| சென்னை | 12 | 8 | 4 | 0 | 0 | 16 | +0.544 |
| மும்பை இந்தியன்ஸ் | 12 | 8 | 4 | 0 | 0 | 16 | +0.245 |
| கொல்கத்தா. | 12 | 7 | 5 | 0 | 0 | 14 | +0.403 |
| கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் | 13 | 7 | 6 | 0 | 0 | 14 | +0.271 |
| கொச்சி | 13 | 6 | 7 | 0 | 0 | 12 | -0.186 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 13 | 5 | 7 | 0 | 1 | 11 | -0.969 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 13 | 5 | 8 | 0 | 0 | 10 | -0.080 |
| புனே வாரியர்ஸ் | 12 | 4 | 8 | 0 | 0 | 8 | -0.033 |
| டில்லி | 13 | 4 | 9 | 0 | 0 | 8 | -0.448 |


# ஒலிம்பிக் மரதன் நடப்பு சம்பியன் கென்ய வீரர் வன்ஜிரு மர்ம மரணம்

நடப்பு ஒலிம்பிக் மரதன் சம்பியனான கென்யாவைச் சேர்ந்த சாமுவேல் வன்ஜிரு தனது வீட்டின் பல்கனியிலிருந்துவிழுந்துஉயிரிழந்துள்ளார்.

24 வயதான சாமுவேல் வன்ஜிரு மனைவியுடன் ஏற்பட்ட வாக்குவாதமொன்றையடுத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இறுதியாக 2008 ஆம் ஆண்டு சீனாவில் பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் மரதன் போட்டியில் 2 மணித்தியாலம் 6 நிமிடங்கள் 32 வினாடிகளில் ஓடிமுடித்து தங்கப் பதக்கம் பெற்றவர் வன்ஜிரு. அது புதிய ஒலிம்பிக் மரதன் சாதனையாகும். மரதன் ஓட்டத்தில் ஒலிம்பிக் தங்கப்பதக்கம் பெற்ற முதலாவது கென்ய வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாமுவேல்வன்ஜிருவின்மனைவி த்ரிஸா என்ஜேரி அன்றையதினம்




வெளியில் சென்று எதிர்பாராத விதமாக முன்கூட்டியே வீடு திரும்பிய போது வன்ஜிரு மற்றொரு பெண்ணுடன் படுக்கையைப் பகிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டதாகவும் அதையடுத்து அவர் இருவரையும் வீட்டின் உள்ளே வைத்து பூட்டி விட்டு சென்றதாகவும் கூறப்படுகிறது.

சில நிமிடங்களின் பின்னர் வீட்டின் பல்கனியிலிருந்து வன்ஜிரு குதித்துள்ளார். 6 மீற்றர் உயரத்திலிருந்து குதித்த அவர் கொங்கிறீட் தரையில் தலை மோதிய நிலையில் உயிரிழந்துள்ளார்.

இது தற்கொலை என பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் முதலில் தெரிவித்திருந்தார். எனினும் இது பற்றி உறுதியாகக்கூற முடியவில்லை என பிராந்திய பொலிஸ் தலைவர் ஜாஸ்பர் ஒம்பாட்டி கூறியுள்ளார்.

இதேவேளை வன்ஜிரு தற்கொலை செய்திருக்க மாட்டார் என தான் 100 சதவீதம் நம்புவதாக அவரின் இத்தாலிய முகவரான பெடேரிக்கா ரோஸா கூறியுள்ளார்.

2005 ஆம் ஆண்டு அரை மரதன்ஓட்டத்தில்உலகசாதனைபடைத்த வன்ஜிரு 2007 ஆம் ஆண்டு லண்டன் மரதனில் முதலிடம் பெற்றார். 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வெல்லும் கனவை நனவாக்கிய அவர் 2009 ஆம் ஆண்டு சிகாகோ லண்டன் மரதன் போட்டிகளிலும் 2010 ஆம் ஆண்டு சிகாகோ மரதன் போட்டியிலும் தங்கம் வென்றமை குறிப்பிடத்தகது.

ஆனால் வீட்டில் அவரின் வாழ்க்கைகொந்தளிப்பானதாகவே இருந்தது. கடந்த டிசெம்பர் மாதம் அவர் தனது மனைவி த்ரிஸாவை தாக்கியதுடன் அவரையும் பணிப் பெண்ணையும் கொல்லப்போவதாக அச்சுறுத்தியதாகவும்பாதுகாப்பு ஊழியர் ஒருவரை காயப்படுத்தியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது. எனினும் த்ரிஸா தனது புகாரை பின்னர் வாபஸ் பெற்றுக் கொண்டார்.

சாமுவேல் வன்ஜிருவின் மரணம் பெரும் அதிர்ச்சியளிப்பதாக இரு தடவை ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற புகழ்பெற்ற மரதன் வீரரான எத்தியோப்பியாவின் ஹேய்ல் கெபர்சேலாஸி தெரிவித்துள்ளார்.

இம் மரணம் வன்ஜிருவின் குடும்பத்தினருக்கு மாத்திரமல்லாமல் கென்யாவுக்கும் உலகின் மெய்வன்மை விளையாட்டு சமூகத்திற்கும் பேரிழப்பாகும் என கென்ய பிரதமர் ரெய்லா ஒடின்கா தெரிவித்துள்ளார்.

## இராணுவத்தின் அறி...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இவ்வறிக்கையில்வன்னிப்போரின் இறுதிக் காலப்பகுதியில் வடக்கில் செயற்பட்ட கட்டளைத்தளபதிகளின் சாட்சியங்கள் ஆதாரங்களுடன் உள்ளடக் கப்பட்டுள்ளன. இந்த உள்ளடக்கங்களின் நம்பகத்தன்மை நிபுணர் குழுவின் குற்றச்சாட்டுக்களுக்கு சவாலாகவே அமையும்.

அரசாங்கத்திற்கும் படைத்தரப்பிற்கும் எதிராக ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு போர்க் குற்றச் சாட்டுக்களையும் மனிதவுரிமை மீறல்களையும் முன்வைத்துள்ளது. இக்குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பக்கச் சார்பானவை.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரில் இறுதிக்காலப் பகுதியில் வன்னி கட்டளைத் தளபதியாகவே நான் கடமையாற்றினேன்.

இங்கு நடைபெற்ற உண்மைச் சம்பவங்கள் தொடர்பில் என்னால் பொறுப்புடன் கூறமுடியும். எவ்வாறாயினும் படைத்தரப்பினருக்கு எதிராகவே கூடுதலாக குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றது.

எனவே இக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு விளக்கம் அளிக்கவேண்டியது எமது கடமையாகும். இதனடிப்படையில் அக் காலப் பகுதியில் வடக்குப் பிரதேசங்களில் படை நடவடிக்கைகளை முன்னெடுத்த அனைத்து கட்டளைத் தளபதிகளும் இணைந்து ஒரு அறிக்கையைத் தயாரித்து வருகின்றோம். அந்தப்பணி இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது.

இந்த அறிக்கையானது உண்மைச் சம்பவங்களை உள்ளடக்கிய நேர்மையானதாகும். அதனை இவ் வார இறுதிக்குள் பாதுகாப்புச் செயலாளரிடம் கையளிக்கவுள்ளோம் என படைத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார். (ச-5)

## எரிக் சொல்ஹெய்மின்...

கருத்திற்கொண்டு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் சிலருக்கு அகதி அந்தஸ்து வழங்கியதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் விசேட சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் குறித்த நாளேட்டுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது குறிப்பிட்டிருந்தார்.

அவரது கருத்துக் குறித்து அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது. இலங்கைக்கான நோர்வே தூதர் ஹில்டே ஹெரல்ஸ்டட் வெளிவிவகார அமைச்சுக்கு நேற்று முன்தினம் அழைக்கப் பட்டிருந்ததுடன் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணா திலக அமுகம அவரிடம் எரிக் சொல்ஹெய்மின் கருத்துத் தொடர்பான அரசாங்கத்தின் அதிருப்தியைத் தெரிவித்திருந்தார். (ச-5)

## இன்றைய ஆட்டம்

சென்னை சுப்பர் கிங்ஸ்

எதிர்

கொச்சி தஸ்கர்ஸ் கேரளா

இரவு 8.00 மணி

சென்னை

## முன்பள்ளி விளையாட்டு விழா

தர்மகுலசிங்கம் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவும் மறைந்த செல்வி இ.தேனுஷாவின் ஓராண்டு நினைவு தினமும் இன்று புதன்கிழமை பி.ப ஒரு மணிக்கு குணசேகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் கா.அருந்தவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் பூ.சக்திவேல் கலந்து கொள்கிறார். (எ)

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# போர்க்குற்ற விசாரணைகளுக்கு...

நடத்தியிருந்தார்.

இப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இவ்விரு நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் குறித்து இலங்கை அரசாங்கம் கவனம் கொள்ளவேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விரு நாடுகளும் இணைந்து வெளியிட்டுள்ள இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் இலங்கையில் உண்மையான தேசிய நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தவேண்டும்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை அவர்களின் வீடுகளில் மீளக்குடியேறுவதையும், அவசர கால விதிகளை மீளப் பெறுமாறும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் மற்றும் போரின் போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையை ஏற்படுத்துமாறும் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா கொழும்பைக் கோரியுள்ளார்.

உண்மையான அபிவிருத்தி, மீள் கட்டுமானப்பணிகள், எஞ்சியுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட பலவற்றை விளக்கிக்கொள்வதற்கான சக்தி மற்றும் புரிந்துணர்வு என்பன தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்கைக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

அதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்க்கட்சிகளுடன் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளின் போது வழங்கப்படும் வாக்குறுதிகள் துரிதமாக நிறைவேற்றப்படும் என இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்திலிருந்து கட்டியெழுப்பப்படும் அதிகாரப்பரவலாக்கல் திட்டம் ஒன்றின் மூலம் தேசிய நல்லிணக்கத்திற்குத் தேவையான சூழல் ஏற்படுத்தப்படும்.

போரின் போது இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துவதில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்து உறுதியுடன் உள்ளது என இவ்விரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் தமிழகத்தின் பிரதான அரசியல் கட்சிகள் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்துவந்த வேளையிலும் இந்தியா மௌனம் காத்துவந்தது.

இந் நிலையில் நிபுணர்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து கொழும்பு விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என புதுடில்லி வலியுறுத்தியிருப்பது முக்கியமான திருப்புமுனையாக நோக்கர்களால் கருதப்படுகின்றது.

இந் நிலையில் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் புதுடில்லியில் ஆதரவைப் பெறுவதற்காக இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் பெரும் ஏமாற்றத்துடன் நாடு திரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# இழந்து போன அரசியல்...

முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டார்கள். மொத்தத்தில் இங்குதான் மூன்று தசாப்தகால தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உயிர்நாடி வெட்டி எறியப்பட்டது.

இந்த வரலாற்றுப் பெருந்துயரை நினைவு கொள்ளும் முகமாக தமிழ் கூறும் நல்லுலகு, மே-18ஆம் திகதியை தேசிய துக்க நாளாகக் கடைப்பிடித்து வருகின்றது.

சாத்வீகமான முறையில் போராடிய ஈழத் தமிழ்ச் சமூகம் வரலாற்றின் நிர்ப்பந்தம் காரணமாகவே ஆயுதங்களைக் கையிலெடுக்க நேர்ந்தது. இலங்கை ஆங்கிலேயர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாள்முதல் சிங்கள ஆட்சியாளர்களினால் தமிழர்கள் உரிமை மறுக்கப்பட்டு இரண்டாம் தரப் பிரஜைகளாகவே நடத்தப்பட்டனர்.

தமிழ்த்தலைமைகள் தமிழர்களது உரிமைகளை வென்றெடுக்கக் காலத்துக்குக் காலம் சிங்கள பேரினவாத அரசுகளுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டபோது நயவஞ்சகத்தனமாக ஏமாற்றப்பட்டனர். செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கூடக் கிழித்தெறியப்பட்டன. சாத்வீகமான முறையில் போராடத் தலைப்பட்ட போது ஆயுத முனையில் அடக்கி ஒடுக்கப்பட்டனர். இதன் விளைவாகவே வரலாற்றின் தவிர்க்கமுடியாத பக்கமாகதமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டனர்.

முள்ளிவாய்க்காலில் ஆயுதப் போராட்டம் ஒடுக்கப்பட்டு இரண்டு வருடங்களைக் கடந்து விட்டபோதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நிவாரணங்கள் உரிய முறையில் இன்னமும் எட்டப்படவில்லை. சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் இன்னமும் முகாம்களில் மக்கள் வாடிக்கொண்டிருக்கிறார்கள். சொந்த இடத்திற்குத் திரும்பிய மக்கள் கூட தகரக் கொட்டகைகளின் கீழ் அரைவயிறும் கால் வயிறுமாகவே வாழ்நாளைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். போரின் போது காணாமல் போனவர்களையும், அதன் பின்பு சரணடைந்து காணாமல் போனவர்களையும் தேடி அவர்களது உறவுகள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

தேசிய துக்கநாளாகிய இன்று முள்ளிவாய்க்கால் வரலாற்றுப் பெருந்துயரை நெஞ்சில் இருந்தி, இலங்கைத் தீவில் தமிழர்கள் இழந்து போன தமது அரசியல் தன்னாட்சி உரிமையை வென்றெடுக்க சபதம் ஏற்போம் என்றுள்ளது. (ச-5)

# யாழ்.சிறை...

குற்றத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஆண்டு தோறும் இவ்வாறான தினங்களில் குற்றங்களின் அடிப்படையில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யப்படும் கைதிகள் வருங்காலத்தில் எவ்வித குற்றச் செயல்களிலும் ஈடுபடாமல் சமூகத்துடன் இணைந்து நல்லவர்களாக வாழ வேண்டும் என யாழ்ப்பாண சிறைச்சாலை உதவி மேற்பார்வையாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார். (ச-5)

# வெள்ளைக்கொடி...

வல்கள் வெளிவந்தால் சரத் பொன்சேகா வழக்கில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதாலேயே அது குறித்த விபரங்களை வெளியிட முடியாது என இவ் வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன் குறிப்பிட்ட எதிர்க்கட்சி அரசியல்வாதியை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் சந்தித்து இவ் விவகாரம் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

இச் சந்திப்பின் போது சரத் பொன்சேகா குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கு இணக்கம் தெரிவித்தால், தாம் வெள்ளைக் கொடிவிவகார வழக்கை மீளப்பெற தயாராக உள்ளதாக கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆயினும் இவ் விவகாரம் தொடர்பில் சரத் பொன்சேகா தரப்பில் இதுவரைபதில் எதுவும் வழங்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. (ச-5)


**காணி, வீடு விற்பனைக்கு**

அத்தியடி பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் 1 1/2 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு :-
0776702430
0213007084

(4957)

**உடனடி வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சர்வதேச கம்பனியான DMI கிளைக்கு பின்வரும் பயிற்சியாளர் தேவை. Manager, Ass.Manager, Supurvisor பயிற்சியின்போது 12000, 15000, ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும். 6 மாத பயிற்சிக் காலம் (தங்குமிட வசதி இலவசம்)

தகைமை : O/L 6 Pass
0775566224, 0212229373

(4958)

**இறைச்சிக் கோழி விற்பனை**

CSI

சுத்தம் செய்த நிறை Kg - 420/=
முழுநிறை Kg - 270 /=


வரணி மிஷன் பாம், வரணி
தொடர்புகளுக்கு: 0777715367

(4895)


## மரண அறிவித்தல்

### சவிரி பிலோமினா

**(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், அரசினர் வைத்தியசாலை, தெல்லிப்பழை)**



நீதிமன்ற வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவிரி பிலோமினா நேற்று (17.05.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ் சென்றவர்களான சவிரி-ஞானப்பு தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான இராயப்பு, பரிமளம் மற்றும் கபிரியேல், அருட்சகோதரி டொறத்தி (திருச்சிலுவை கன்னியர் மடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பிறின்சி யசோ (ஆசிரியர், ஏழாலை புனித இசிதோர் றோ.க. பாடசாலை) ஜெராட் ரசீதன் (சிற்றூழியர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயபாலரட்ணம் (ஜெயபால் - உரிமையாளர் பிறின்ஸி சில்க்ஸ், யாழ்ப்பாணம்). காஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும் பின்றோ, ஸ்ரெபோ (மானிப்பாய் கியூமெடிக்கா தேசிய பாடசாலை) றனோஜில், டனுஸ்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (18.05.2011) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(4956) தகவல் :- க.ஜெயபால் (மருமகன்)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை செல்லம்மா

**(2ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டி)**

2ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லம்மா நேற்று 17.05.2011 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி, தங்கம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசமணியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, ஆனந்தலிங்கம், பொன்னப்பா, மகாலட்சுமி, இந்திராணி மற்றும் சத்தியலட்சுமி, சிவஞானம், சிவலிங்கம், தவலட்சுமி, சந்திரா, நித்தியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 18.05.2011 இன்று புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணிக்கு அல்லப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-
பிள்ளைகள்

(4960)


DHL உத்தரவு பெற்ற முகவர்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு

ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் சேவைகளைப்பெற்றுக்கொள்ளலாம்

DHL உடன் 5 வருட பூர்த்தியை முன்னிட்டு விசேட சலுகைகள்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள்,அன்பளிப்புபொருட்கள்,DVD,CD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும்அனுப்பிட



திருமுருகன் கொம்நெற்

TCN Express,
2B,Nelsan place,COlombo-06.
Customer service No.021 222 7835

இல.259,கே.கே.எஸ் வீதி,யாழ்பாணம். இல.18,பிரதானவீதி,நெல்லியடி. இல.05,திருநகர் பிரதான வீதி,கிளிநொச்சி. இல.46,ஆடியபாதம் வீதி,திருநெல்வேலி.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.